செங்காந்தள் - அகநானூறு - 1

முனைவர் ச. அனிதா சோபியா மார்கிரேட்

புத்தகக்குறிப்பு

9 788197 728860

செங்காந்தள் - அகநானூறு - 1

Title Verso

Title of the Book	:	**Chenkaantal - Agananooru - 1**
புத்தகத்தலைப்பு	:	**செங்காந்தள் - அகநானூறு - 1**
Editor	:	**Dr. S. Anitha Sophia Margaret**
First Edition	:	2024
Pages	:	106
Price	:	350
ISBN Number	:	978-81-977288-6-0

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

பதிப்புரிமை / Copyright © 2024 கட்டுரையாளர்களுக்கு /Authors'

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

செங்காந்தள் புத்தகப் பகுதி

Editorial Board / ஆசிரியர் குழு

முனைவர் ஜெ. கவிதா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641004, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: kavithamahendiran1973@gmail.com

முனைவர் தி. பரிமளா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
மதுரை – 625004, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jeyamadhan05@gmail.com

முனைவர் செ. சாந்தி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: shanthi_sf607@anjaconline.org

முனைவர் ஆ. மகாலட்சுமி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001, தமிழ்நாடு, இந்தியா.

மின்னஞ்சல்: mahalakshmia83@gmail.com

முனைவர் நா. குமாரி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி,
வேலூர்-6, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jeevikumarioct31@gmail.com

முனைவர் சீ. விமல்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரைக்கல்லூரி
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: vimal.vanji2015in@gmail.com

முனைவர் ப. சசிரேகா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குரு நானக் கல்லூரி,
சென்னை – 600042, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் முகவரி: sasirekatamil05@gmail.com

முனைவர் த. மகேஸ்வரி,
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் – 626001. தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: dmakesh88@gmail.com

முனைவர் மு. சுமதி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: sumathisanjay67@gmail.com

பொன். கனகா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வ. உ. சிதம்பரம் கல்லூரி,
தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: pon9514425928@gmail.com

ஆசிரியர் குழு பணி விவரம்

இந்த குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

Editorial Work Flow Details

This Editorial committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

மதிப்புரை

சங்க இலக்கியத்தில் 882 களவுப்பாடல்கள் உள. இவற்றுள் 40 பாடல்களே இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்ற மூன்று வகைக்கும் உரியன. எஞ்சிய 842 பாடல்கள் தோழியிற்புணர்ச்சி என்னும் ஒரு வகைக்கே உரியன. இதனால் தோழி இன்றிக் காதலர்களின் களவொழுக்கம் நீளாது என்பதும், ஐந்திணை இலக்கியப் படைப்புக்குத் தோழி என்னும் பாத்திரம் இன்றியமையாதது என்பதும், தோழியிற் புணர்ச்சிக்குரிய துறைகளே புலவர்களின் நெஞ்சைக் கவர்ந்தன என்பதும் பெறப்படுகிறது' என்னும் டாக்டர் வ. சுப. மாணிக்கனாரின் கூற்று இங்கு நினையத்தகும். களவு ஒழுக்கத்தில் தோழியின் பங்கு மிகவும் இன்றியமையாதது. தோழிக்கும் தலைவிக்கும் உள்ள உறவில் நெருக்கமான அன்புநிலை, ஒருவரை ஒருவர் அழைக்கும் நிலையில் அவர்களிடையே உள்ள உறவு நெருக்கம், தோழி தன்னைத் தலைவியாகவே வைத்துக் கூறும் சந்தர்ப்பங்கள், இன்ப துன்பங்களில் இருவரும் பங்கேற்கும் நிலை ஆகியன பற்றி கூறும் வகையில் முனைவர் அ. இராஜலட்சுமி அவர்களின் “அகநானூற்றில் நெய்தல் நிலத்தோழியின் ஒழுக்கழாறுகள் ஓர் உளவியல் பார்வை” எனும்

இவ்வாய்வுக்கட்டுரை வாயிலாக நன்கு அறிந்து கொள்ளமுடிகிறது.

மனிதன் வாழ்வதற்குரிய முதல் முயற்சி உழைப்பு. இந்த உழைப்பின் வழியாகக் கண்டறிந்த ஆதி வேளாண்மையைப் பற்றியும், நால்வகை நிலப் பாகுபாடு மற்றும் அதன் தொழில் நுட்பத்தைப் பற்றியும் சங்ககால மாந்தர்கள் எவ்வாறெல்லாம் தங்கள் வாழ்வோடு இணைத்து தொழில் புரிந்தனர் என்பதைப் பற்றியும், நிலம், நிலத்தில் உள்ள மண்ணின் தன்மை, நீரின் அவசியம், பருவ காலப் பயிர்கள், மற்றும் வேளாண் பாதுகாப்பு போன்ற செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ள அகநானூற்றின் பல்வேறு பாடல்கள் அடுத்த தலைமுறைக்கு வேளாண்மை குறித்து எடுத்துக் கூறும் வகையில் முனைவர் க.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் “அகநானூறும் அதன்வழி அறியலாகும் ஆதிவேளாண்மையும்” இந்த ஆய்வுக் கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

சங்க இலக்கியத்தில் அகம் சார்ந்த பாடல்களில் புலவர்கள் பெரும்பாலும் உவமைகளைக் கையாண்டுள்ளனர். குறிப்பாக, அகநானூற்றில் பாலைத் திணைப் பாடல்களில் மிகுதியாக தலைவியை வர்ணித்தலின் பொருட்டு புலவர்கள் உவமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இங்கு அகநானூற்றுப்

பாடல்களில் வெளிப்பட்டுள்ள உவமைகள் மட்டும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. அவ்வாறு ஆராய்ந்ததில் பொருளீட்டுதலின் பொருட்டு பிரிந்து சென்ற தலைவனை நினைத்து வாடியிருக்கும் தலைவியின் பொருட்டான பாலைத் திணை சார்ந்த பாடல்களில் உவமைகள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பத்திற்கும் மேற்பட்டுள்ள உவமை வகைகள் அகநானூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதை முனைவர் இர. சாம்ராஜா அவர்களின் “அகநானூற்றில் உவமை நயம்” இந்த ஆய்வுக் கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

மனிதர்கள் தம் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உரிய அறிவையும் திறமையையும் பண்பாடு அளிக்கிறது. தனிமனிதனின் சிறந்த செயல்களே பண்பாடாக மாறுகின்றன. ஒரு நாட்டின் பண்பாட்டு நிலைக்களன் அந்நாட்டில் வாழும் ஆடவர், பெண்டீரைச் சார்ந்துள்ளது. பண்பின் ஒவ்வொரு கூறும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தன்மை உடையதாக விளங்குகிறது. அகநானூற்றில் நெய்தல் திணைப் பாடல்களில் நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறையினை அவர்களது குணநலன்களையும், பழக்க வழக்கங்களையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறைக் குறித்து அறிவதாக முனைவர் சி. ஷகிலாபானு

அவர்களின் “அகநானூற்றில் காணப்படும் சமுதாயச் செய்திகள்” எனும் இக்கட்டுரை வாயிலாக நன்கு அறிந்து கொள்ளமுடிகிறது.

நன்றி.

முனைவர் ச. அனிதா சோபியா மார்கிரேட்

உள்ளடக்கம்

வ. எண்	தலைப்பு	ப. எண்
1.	அகநானூற்றில் நெய்தல் நிலத்தோழியின் ஒழுக்கழாறுகள் ஓர் உளவியல் பார்வை முனைவர் அ. இராஜலட்சுமி	1-27
2.	அகநானூறும் அதன்வழி அறியலாகும் ஆதிவேளாண்மையும் முனைவர் க. கிருஷ்ணமூர்த்தி	28-58
3.	அகநானூற்றில் உவமை நயம் முனைவர் இர. சாம்ராஜா	59-81
4.	அகநானூற்றில் காணப்படும் சமுதாயச் செய்திகள் முனைவர் சி. ஷகிலாபானு	82-106

Ethical Practices of the Maid of Neithal Land Found in *Akananooru* - A Psychological Perspective

Dr. A. Rajalakshmi, Assistant Professor of Tamil,
Kongunadu Arts and Science College, Coimbatore-641029,
Tamil Nadu, India
ORCiD: https://orcid.org/0000-0002-2191-4384
DOI: 10.5281/zenodo.13726292

Abstract

Tamils classified their lives into internal and external lives. The Leader (Thalaivan) and Beloved (Thalaivi) are the primary characters of life. Thozhi, Sevili, Nattrai, Paanan, Parathai etc. are the sub-characters. Thozhi's role is very significant among them. Tolkappiyar has said about the nature of women as "Achham Naam Matanum..." in his the Kalaviyal chapter. It is a clear message that we know through many songs that Thozhi, who has all the four qualities mentioned by Tolkappiyar. The hypothesis of this chapter is to look psychologically at the characteristics of Thozhi, her personality, her intelligence and the subtlety of her behavior on religious occasions through the songs of Neithal in "Akananooru".

Keywords: *Agananooru*, Neithal Land, Ethics of Maid, Psychological View.

References

[1] Dr. S. V. Subramanian. *Tolkappiyam Thelivurai*. Manivaskar Library, Chennai - 600108, 2003.

 ISBN Number: 978-81-977288-6-0

[2] Professor K. Nagarajan. *Kalvi Ulaviyal*. Ram Publishing House, Chennai-600093, 2007.

[3] Dr. Ira Jeyapal (Uraiasiriyar). *Sanga Ilakiyal Agananooru*. New Century Book House (P) Litt, Chennai-600098, 2004.

[4] Puliyurkesikan (Uraiasiriyar). *Sangha Ilakiyam Moolamum Uraiyum*. Sarada Publishing House, Chennai - 600014, 2012.

Author Contribution Statement: NIL.

Author Acknowledgement: NIL.

Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

ISBN Number: 978-81-977288-6-0

அகநானூற்றில் நெய்தல் நிலத் தோழியின் ஒழுகலாறுகள்-ஓர் உளவியல் பார்வை

முனைவர் அ. இராஜலட்சுமி, தமிழ் உதவிப்பேராசிரியர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-2191-4384
DOI: 10.5281/zenodo.13726292

ஆய்வுச்சுருக்கம்

தமிழர் வாழ்வை அகம், புறம் எனப் பிரித்து வாழ்ந்து வந்தனர். வாழ்க்கையில் முதன்மை மாந்தர்களாகத் தலைவனும் தலைவியும் உள்ளனர். தோழி, செவிலி, நற்றாய், பாணன், பரத்தை போன்றோர் துணை மாந்தர்களாக உள்ளனர். இவர்களுள் தோழியின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. ***அச்சமும் நாணும் மடனும்...*** *என்று பெண்களின் இயல்பு பற்றி தொல்காப்பியர் தனது களவியல் அதிகாரத்தில் கூறியுள்ளார். தொல்காப்பியர் கூறிய நான்கு பண்புகளிலும் சிறந்தவளாக இருந்த தோழி, தலைவியின் பால் பேரன்பு கொண்டவளாகவும் விளங்கினாள் என்பதைப் பல பாடல்களின் வழியாக நாம் அறியும் ஒரு வெளிப்படையான செய்தி. அகநானூற்றில் நெய்தல் நிலப் பாடல்களின் வழியாக தோழியின் பண்புகள், தோழியின் ஆளுமை, அவளது அறிவுக்கூர்மை, சமய*

ISBN Number: 978-81-977288-6-0

சந்தர்ப்பங்களில் அவள் நடந்துக்கொள்ளும் நுட்பத்தன்மை பற்றி உளவியல் வழியில் பார்ப்பதே இக்கட்டுரையின் கருதுகோள் ஆகும்.

கலைச்சொற்கள்: அகநானூறு, நெய்தல் நிலம், தோழியின் ஒழுகலாறுகள், உளவியல் பார்வை.

முன்னுரை

தமிழர் வாழ்வை அகம், புறம் எனப் பிரித்து வாழ்ந்து வந்தனர். வாழ்க்கையில் முதன்மை மாந்தர்களாகத் தலைவனும் தலைவியும் உள்ளனர். தோழி, செவிலி, நற்றாய், பாணன், பரத்தை போன்றோர் துணை மாந்தர்களாக உள்ளனர். இவர்களுள் தோழியின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது. தலைவன் மற்றும் தலைவியின் களவு வாழ்க்கைக்கும் கற்பு வாழ்க்கைக்கும் உறுதுணையாக நின்றும் இவர்களின் மகிழ்ச்சிக்காக பல்வேறு சூழ்நிலைகளிலும் தனது ஆளுமையின் தன்மையை உணர்ந்து செயல்பட்டவள் தோழி. பெண்ணின் தன்மைகளை என்றும் மறவாது, பண்பாட்டு நெறிகளில் இருந்து சிறிதும் வழுவாமல் தனது கடமைகளை நிறைவேற்றியவள் தோழி. ஆண்கள் பல்வேறு தேசங்களுக்குச் சென்று வருவதால் பரந்துபட்ட அறிவைப் பெற்று இருந்தனர். ஆனால் பெண்கள் தங்களது திணை நிலத்தில் வாழ்ந்து வந்த போதிலும்

ISBN Number: 978-81-977288-6-0

கேள்வி அறிவை மிகுதியாக தங்களது கூற்றுகளில் பயன்படுத்தி உள்ளதை நாம் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக தோழி கூற்று நிகழ்த்தும் இடங்களில் அதிகப்படியான வரலாற்று நிகழ்வுகளையும், அறிவுரைப் பகிர்தலும், சிறந்த வழிகாட்டியாக விளங்குவதையும் பல இடங்களில் காணமுடிகிறது. அத்தகைய தோழி அக வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவளாக விளங்குகிறாள். அகநானூற்றில் நெய்தல் நிலத் தோழி எத்தகைய சிறப்பம்சம் பொருந்தியவளாகக் காணப்பட்டாள் என்பதைக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

அகநானூறு

சங்க இலக்கியப் பாடல்களில் அகம் சார்ந்த பாடல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. பிறருக்குச் சொல்லவொண்ணா பேரின்பமே அகம் எனப்பட்டது. திணை என்னும் பெயரே அகத்திற்கு உரியது. எட்டுத்தொகையில் ஒன்றான அகநானூறு பதின்மூன்றடி சிற்றெல்லையும் முப்பத்தியொரு அடி பேரெல்லையும் கொண்டது. இந்நூலில் உள்ள நானூறு பாடல்கள் மூன்று பிரிவுகளாக உள்ளன. 1-120 பாடல்கள் களிற்றியானை நிரை எனவும், 121-300 பாடல்கள் மணிமிடை பவளம் எனவும், 301-400 பாடல்கள் நித்திலக்கோவை எனவும் பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலைத் தொகுத்தவர்

ISBN Number: 978-81-977288-6-0

உப்பூரிக்குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மனார். தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்றும் அறிகிறோம்.

அகநானூற்றுப் பாடல்கள் தொகுப்போரால் ஒரு திணை ஒழுங்கமையத் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒன்றுமூன் றைந்தொன்பான் பாலை; ஓதாது
நின்றவற்றில் நான்கு நெறிமுல்லை; அன்றியே
ஆறாம் மருதம் அணி நெய்தல் ஐயிரண்டு
கூறாதவை குறிஞ்சிக் கூற்று. . **(தொல்., நூ. 1045)**

என்று வெண்பா ஒன்று அகநானூற்றின் கூற்று முறை பற்றி கூறுகிறது. நெய்தல் திணை பாடல்கள் 10, 20, ... 400 என்று முறையில் தொகுப்பட்டுள்ளது. 400 பாடல்களில் 40 பாடல்கள் நெய்தல் திணைக்கு உரியவையாகக் காணப்படுகின்றன. மொத்தம் நாற்பது பாடல்களில் 5 பாடல்கள் தலைவன் கூற்று நிகழ்த்துபவையாகவும், 5 பாடல்கள் தலைவிக்குக் கூற்று நிகழும் பாடல்களாக உள்ளன. மீதம் உள்ள முப்பது பாடல்களும் தோழி கூற்று நிகழ்த்துபவையாகக் காணப்படுகின்றன. அகநானூற்றில் உள்ள நெய்தல் நிலப்பாடல்களில் செவிலி, நற்றாய், பாணன், பாங்கன், பரத்தை என மற்றோருக்குக் கூற்று நிகழவில்லை என்பது இங்கு அறியப்படுகின்றது.

தோழிக்கூற்று

தலைவரும் விழும நிலை எடுத்துரைப்பினும்,

ISBN Number: 978-81-977288-6-0

போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்,
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்,
என்றிவை எல்லாம் இயல்புர நாட்டின்
ஒன்றித்து தோன்றும் தோழி... (தொல்., நூ. 985)

தலைவனுடன் தலைவியை உடன்போக்கில் போகுமிடத்தும், வருகின்ற துன்ப நிலையை எடுத்துக்கூறல், தலைவன் பொருள் பிரிவு போன்றவற்றிற்கு விடுக்கும் போது, உடன்போக்கில் இருவரையும் அனுப்பும் போது ஏற்படும் துன்பங்களைப் பற்றி பேசும் போதும், நற்றாய், செவிலி ஆகியோரின் துன்பத்தைப் போக்கும் போதும், தலைவி பிரிவு துன்பத்தில் இருக்கும்போது அவளை ஆற்றுவது போன்ற இடங்களிலும்,

பெறற்கு அரும் பொருள் முடிந்தபின் வந்த
தெறற் கரு மரபின் சிறப்பின் கண்ணும் …
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி எல்லாம்
தோழிக்குரிய என்மனார் புலவர்…

(தொல்., நூ. 1096)

கற்புக்காலத்திலும்,

நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறப்பினும் செலவினும் பயல்வினும்..
…ஆங்குஅதன் தன்மையின் வன்புறை உளப்படப்

ISBN Number: 978-81-977288-6-0

பாங்குற வந்த நாலெட்டு வகையும்
தங்கு யாரும் சிறப்பின் தோழி மேன -...

(தொல்., நூ. 1060)

களவுக் காலத்திலும் தோழிக்குக் கூற்று நிகழும் இடங்களாக உள்ளன.

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான ...

(தொல்., நூ. 1155)

அடக்கம், அமைதி, நேர்மை, உண்மையினை வற்புறுத்தும் சொல்வண்மை, நல்லறிவு, பிறர் காணுதற்கு அருமை என்பன பெண்ணின் பண்புகள். இவை தலைவிக்கு மட்டும் உரியவை என்று பார்க்காமல் தோழிக்கும் உரியனவாக பார்கும் போது அந்த அளவில் கூற்று இடங்களில் தோழி சிறந்த அறிவுரை பகர்பவளாகவும், சிறந்த மன வளர்ச்சி அடைந்தவளாகவும், சிறந்த ஊக்கியாகவும், மனவெழுச்சியின் கண் செயல்படுபவளாகவும் காணப்படும் நிலைகளை அகநானூற்றின் நெய்தல் திணை புலப்படுத்துகிறது.

தோழி ஒரு சிறந்த அறிவுரையாளர்

அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவர் ஆகியோருடையே நேர்முகத்தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, அறிவுரை பகர்பவர் தனது

ISBN Number: 978-81-977288-6-0

திறமையையும், ஏற்படுத்திக்கொண்ட நெருக்கத்தையும் பயன்படுத்தி, அறிவுரை பெற வந்தவன் தன்னுடைய தற்போதைய சூழ்நிலையையும், இதனால் விளையக்கூடிய எதிர்கால சூழ்நிலையையும் உணரச்செய்து, தன்னுடைய இயல் திறன்களையும், ஆற்றல்களையும், தனக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள வகையில் பயன்படுத்தி மனநிறைவுள்ள வாழ்க்கை வாழவும், தனது பிரச்சனைகளை எதிகாலத்தில் தானே தீர்த்துக் கொள்ளவும் உதவும், வளர்ச்சியைப் பெருக்கும் செயலே அறிவுரை பகர்தலாகும்.(டால்பார்ட்) (கல்வி உளவியல், ப. 476)

மேற்கூறிய அறிவுரை பகர்தல் கோட்பாட்டின் படி தோழி சங்ககாலத்தில் தலைவனுக்கு அறிவுரை கூறியுள்ளாள்.

வரைவு அறிவுருத்தல்

சில் செவித்து ஆகிய புணர்ச்சி அலர் எழ,
இல்வயிற் செறித்தமை அறியாய்; பல் நாள் ...
(அகம்., பா. 90:4-5)

தெருமரல் உள்ளமொடு வருந்தும்,நின்வயின்,
நீங்குக என்று, யான் யாங்ஙனம் மொழிகோ?...
(அகம்., பா. 90:7-8)

ISBN Number: 978-81-977288-6-0

உங்களது புணர்ச்சி அரை எழுந்தது. அதனால் தலைவியை அவள் வீட்டார் இற்செறித்தனர். என்பதைக் குறிப்பால் உணர்த்தி இக்களவொழுக்கத்தில் இருந்து நீங்குவாயாக என்று மறைமுகமாகக் கூறி வரைவு வேண்டி அறிவுரை கூறியுள்ளாள் என்ற செய்தி மதுரை மருதன் இளநாகனார் பாடல் ஒன்றில் அமைந்து உள்ளது. மற்றுமொரு பாடலிலும்,

எல்லினை பெரிது எனப் பலமாண் கூறி,
பெருந்தோள் அடைய முயங்கி,நீடுநினைந்து,
அருங்கடிபி படுத்தனள் யாயே;...

(அகம்., பா. 150:4-6)

பகற்குறியிடத்து வந்து கண்டு மீள்கின்ற தலைவனைக் கண்டு," நீ பெரிதும் அழகுடன் திகழ்கிறாய் எனப்பலப்பலப் பாராட்டி அவளுடைய தோளை முழுவதும் தழுவி, நெடிது நினைந்து பார்த்து தலைவியைத் தாயானவள் இற்செறித்து விட்டாள் என்று தோழி கூறுகிறாள். உலோச்சனார் பாடல் ஒன்றில்,

வம்ப நாரை இனன் ஒலித்தன்ன
அம்பல் வாய்த்த தெய்ய... (அகம்., பா. 100:14-15)

என்ற பாடலில் புதிய நாரைக்கூட்டம் ஒலித்தார் போன்ற அலர் எமது ஆரவாரமிக்க ஊரின் கண் எழுந்தது என்று கூறுகிறாள். பகற்குறி மறுத்து குறிப்பாக இரவுக்குறி

ISBN Number: 978-81-977288-6-0

மறுத்தும் வரைவு வேண்டும் பாடல் ஒன்றில் தலைவியின் நலன் அழிவதை எடுத்துக்காட்டி,

அம்மா மேனி தொல்நலம் தொலைய,

துஞ்சாக் கண்ணள் அலமரும்...

(அகம்., பா. 270:10-11)

வரைவு வேண்டி கூறுகிறாள். இரவுக்குறிக்கண் வந்து இன்புற்று நீங்கும் தலைவனை எதிர்ப்பட்டு கூறிய பாடல் ஒன்றில்,

... மணல் கமழ் பாக்கத்துப் பகுக்கும்

வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே....

(அகம்., பா. 10:10-13)

பரதவர் தாம் அழிவு சோர்ந்த திமிலானும் பண்ணின வலையானும் தமது தொழிலாகிய வேட்டை மேற் செல்லாது, தேடாமல் வந்த இழிந்த சுறா மீனை அகப்படுத்து, அதனை அழித்துக் கூறு வைத்து எல்லோரையும் அழைத்தாற் போல, நீயிரும் நுமக்கு உறுதியாக ஆக்கிக் கொள்ளப்பட்ட நன்மைகளான் நுமக்கு ஒழுக்கமாகிய நல்வழியில் ஒழுகாது, கண்டோர் இகழ்ந்த களவொழுக்கத்தில் ஒழுகி, இக்களவினைப் பரப்பிப் பலரும் அலர் கூறும்படி பண்ணா நின்றீர் என்றாள். இவள் நலன் உரிதினிற் கொண்டாங்கு பெயர்தல் வேண்டும் என்றது இவளை வரைந்து கொண்டு போக வேண்டும்; அன்றாயின் இவள் இறந்துபடுவாள்

 ISBN Number: 978-81-977288-6-0

என்பது போல உள்ளுறையாக கூறியதாகும். மேலும் ஒரு பாடலில், பகற்குறியிடத்து வந்த தலைவனை இரவுக்குறி வர சொல்லி மீண்டும் இரவுக்குறி மறுத்து வரைவு கடாவிய செய்தி உள்ளது.

படகுத் தொழிலின் மேற் கருத்தூன்றித் தங்கிய தந்தைக்கு, இளமை பொருந்திய மகள் மீன் கொண்டு வருவதற்கு முன்னே தான் உப்புவிற்ற நெல்லாலே ஆக்கப்பட்ட மூரல் வெண்சோற்றைப் புளிங்கறியைச் சொரிந்து கொழுமீன் தடியோடு கொடுத்தார் போலத் தாம் வரைதற்குத் தாமும் புறம்பே முயல நாங்களும் அறத்தொடு நிற்றல் என்ற வகையினாலே ஈங்கு முயல்வோம் எனத் தோழி உள்ளுறையாகக் கூறியுள்ளாள்.

அயிலை துழந்த அம் புளிச் சொரிந்து,
கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும் ...

(அகம்., பா. 60:5-6)

அலர் ஏற்பட்டதால், தாய் தலைவியை இற்செறித்ததால், தலைவி தலைவனை நினைத்து வருந்தியதால் ஏற்பட்ட உடல் வேறுபாட்டினால் ஏற்பட்ட பிரச்சனைகளுக்குரிய பொருத்தமான தீர்வு தலைவன் தலைவியை விரைந்து வரைவு கடாவுதல் என்பதாக தான் கருதிய தீர்வை அறிவுரையாக கூறியுள்ளாள்.

 ISBN Number: 978-81-977288-6-0

மறைமுக (நெறிசாரா) அறிவுரை பகர்தல்

கார்ல் ரோஜர்ஸ் என்பவர் இம்முறையைப் பிரபலப்படுத்தினார். இம்முறையில் அறிவுரை அளிப்பவர் பிரச்சனைக்குரிய தீர்வைக் கூறுவதில்லை. அறிவு பெறுபவர் தானே தீர்வைக் காணக் கூடிய வகையில், உகந்த சூழ்நிலையில் ஏற்படுத்திக் கொடுத்து இலக்கை எட்டுவதில் துணைபுரிகிறார். அறிவுரை பெறுபவர் தன்னுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து, தந்து நிறை-குறைகளை அறியச் செய்து, மனமுதிர்ச்சி பெறச் செய்தல் மூலம் மேம்பட்ட பொருத்தப்பாட்டினை அடையச் செய்தலே அறிவுரை அளிப்பவரின் செயல்பாடு ஆகும். (கல்வி உளவியல், ப. 476)

தோழி மறைமுகமாக (நெறிசாரா) அறிவுரை பகர்தல் வழியையும் கையாண்டு தலைவன் சிறந்த தீர்வை அடைய வழிகாட்டி உள்ளாள் என்பதும் பல சங்கப் பாடல்கள் வழி அறியப்படுகிறது. 370ஆவது பாடலில்

வெறிகொள் பாவையின் பொலிந்தஎன் அணிதுறந்து,
ஆடுமகள் போலப் பெயர்தல்
ஆற்றேன் தெய்ய; அலர்க, இவ்ஊரே!

(அகம்., பா. 370:14-16)

ISBN Number: 978-81-977288-6-0

இல்லம் சென்று நோயோடு தங்குவேன், ஆயின் யான் இற்செறிக்கப்பட்டு என் தந்தையின் காவலிற் படுவேன் என்றும், உயிர் வாழாது இறந்துபடுவேன் என்றும் கூறுகின்றாய். யானும் இல்லம் செல்லாது உன்னுடன் இருப்பேன்; இவ்வூர் மக்கள் அலர் கூறினும் கூறுக என்று தோழி தலைவியின் பிரிவுத் துன்பத்தையும் காவல் மிகுதியையும் தலைவன் சிறைப்புறத்தானாக நிற்கும் போது தலைவன் அந்த சூழ்நிலையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அவனே முடிவு எடுக்கும் வகையில் நெறிசாரா அறிவுரை பகற்பவராக இருந்துள்ளாள் என்பது தெரியவருகிறது.

தலைவிக்குத் தோழி கூறிய அறிவுரைகள்

தலைவனின் வேண்டுகோளுக்கு இணங்குமாறு தலைவிக்குத் தோழி, இன்பம் போங்க பலமுறை நம்மை வந்து கூடியும், தன் பெருமைக்குச் சிறுமை தோன்ற மகளிராகிய நம்மைப் பணிந்து, நம் துயரத்தை அறிந்து கொள்ளாமல், நம்மைப் பிரிவதனால் உண்டாகும் தன் துயரம் வெளிப்படுமாறு தளர்ந்த நேசத்துடன் செல்வான் என்று கூறி அவனுக்கு உடன்படுமாறு கூறியுள்ளாள்.

இன்புறப் புணர்ந்து, இளிவரப் பணிந்து,
தன்துயர் வெளிப்படத் தவறி,நம்துயர்
அறியா மையின், அயர்ந்த நெஞ்சமொடு -...

(அகம்., பா. 330:3-5)

ISBN Number: 978-81-977288-6-0

மற்றுமொரு பாடலில்,

நாம் ஏத்தி கொள்ளாம் ஆயின்,தான்அது
துணிகுவன் போலாம்;நாணுமிக உடையன்;
வெண்மணல் நெடுங்கோட்டு மறைகோ? -
அம்ம, தோழி! (அகம்., பா. 380:10-14)

தலைவனது தேர் காணப்படுகிறது, அவனை ஏந்திக் கொண்டு வரவேற்று ஏற்றுக் கொள்ளவில்லையாயின், நாம் அவன்பால் அன்பிலன் எனக்கருதி மீண்டு சென்றுவிடுவான் போலும்! நான் இந்த வெண்ணிற மணற்குன்றின் பின்னால் ஒளிந்து கொள்ளட்டுமா? நீ உன் கருத்தினைக் கூறுவாயாக! என்று கூறியுள்ளாள். செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்கொற்றனார் பாடல் ஒன்றிலும்

செவ்வாய்ப் பெண்டிர் கவ்வையின் கலங்கி,
இறைவனை நெகிழ்ந்த நம்மொடு
துறையும் துஞ்சாது,கங்கு லானே !...

(அகம்., பா. 250:12-14)

சிற்றூரில் வெஞ்சொற் கூறும் வாயினையுடைய மகளிர், பலரும் அறியப் பழிச்சொல் கூறினர். அதனைக் கேட்டு உள்ளம் கலங்கி,நம் தலைவனிப் பற்றிய நினைவுத் துன்பத்தால் இரவு முழுவதும் உறங்காது விழித்திருந்த நம்முடன் கடற்றுறையும் உறங்காது விழித்திருக்கின்றதே அதற்குரிய காரணம் தான் யாதோ? என்று

ISBN Number: 978-81-977288-6-0

கூறுவதிலிருந்து நீ நம் பெருமானின் குறையினை நயந்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்று தோழி குறைநயப்பக் கூறியுள்ளாள்.

தோழி கூறிய செய்திகள் கொண்டு ஆராயும் போது தலைவனுக்கு ஏற்பட்ட துன்பத்திற்குப் பொருத்தமான தீர்வு தலைவி தான் என்று தோழி தான் கருதியதைத் தகுந்த தீர்வு என்று தெரிந்து தலைவிக்கு அறிவிக்கிறாள். தலைவனின் குணப்பண்புகள், குடிப்பெருமைகள் அறிந்த பின்பு தான் தலைவியைத் தலைவனுடன் கூட வேண்டிய வழிகாட்டியாக இருந்துள்ளாள் என்பதும் இந்தப் பாடல்கள் மூலம் அறியலாம். தன்னை நாடி வந்த தலைவனின் பிரச்னைக்குரியத் தீர்வைத் தேர்ந்தெடுத்து தலைவிக்குக் கூறுகிறாள்.

வழிகாட்டியாக இருந்த தோழி

ஆர்தர் ஜெ.ஜோன்ஸ் கூற்றுப்படி

> **'வழிகாட்டுதலின் நோக்கம், ஒருவன் தனக்கு தேவையானவற்றை புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்யவும்,பொருத்தப்பாட்டு நடத்தையினைப் பெறவும்,வாழ்வின் இக்கட்டான தருணங்களில் தான் செய்ய வேண்டியவை யாவை என்பதைப் புரிந்து கொண்டு செயலாற்றிடவும் உதவி செய்து,சுயநெறிப்படுத்தல் என்னும் ஆற்றலைத்**

 ISBN Number: 978-81-977288-6-0

தொடர்ந்து பெற்றிடச் செய்தலே ஆகும்... (கல்வி உளவியல், ப.எண்.468)

தோழி தலைவனின் பிரச்சனையைத் தீர்க்க தலைவனே முடிவெடுக்க உதவுகிறாள். தோழி மூலம் தலைவனுக்குக் குறி இடம் மாற்ற வழிகாட்டுகிறாள். ஆனால் தலைவனைத் தோழி எந்த இடத்திலும் கட்டாயப்படுத்துதல் இல்லையாதலால் சிறந்த வழிகாட்டியாக இருந்தாள் என்பது பல நெய்தல் நிலப் பாடல்களின் வழி அறியப்படுகிறது.

பொன் போலும் புன்னை மரங்கள் அடர்ந்த அழகிய கடற்கரைச் சோலையில் பகற்பொழுதில் வருவாயாக,

தண் நறும் பைந் தாது உறைக்கும்
புன்னை அம் கானல், பகல் வந்தீமே.

(அகம்., பா. 80:12-13)

என்று மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் பாடலிலும், வண்டுகள் படிந்தாடும் மலர்ந்த பூக்களையுடைய செருந்தி மரம் உள்ள வெண்மையான மணல் பரந்த முடுக்கில்,பூக்கள் நிறைந்த புன்னை மரங்களுடைய அழகிய குளிர்ச்சி பொருந்திய வருவாயாக!

பூவேய் புண்ணைஅம் தண்பொழில்
வாவே தெய்ய, மணந்தனை செலற்கே....

(அகம்., பா. 240:14-15)

ISBN Number: 978-81-977288-6-0

என்றும் மற்றுமொரு பாடலில் பகல்குறி வந்தவனை இரவுக்குறி வருமாறு வழிகாட்டி உள்ளாள்.

அன்றில் சேக்கும் முன்றில்,பொன் என

நன்மலர் நறுவீ தாஅம்

புன்னை நறும்பொழில் செய்தநம் குறியே. ..

(அகம்., பா. 360:17-19)

பல்வேறு மீன்களை உண்ணும் நாரையுடன் பனைமீது அன்றில் தங்கியிருக்கும் முற்றத்தின்கண், பொன் போன்ற நிறமுடைய நறுமலர்கள் உதிர்ந்து பரவிக்கிடக்கும் புன்னை மரங்கள் கொண்ட சோலையில் யாம் குறித்து சொல்லிய இரவுக்குறியிடத்தே இரவின்கண் வருவாயாக! என்று வழிகாட்டியுள்ளாள் தோழி. பல நேரங்களில் தலைவனுக்கு வழிகாட்டி தலைவனை தன் வாழ்வு வளம் பெற தக்க வாழ்க்கைக் கண்ணோட்டத்தைத் தானே உருவாக்கிக் கொள்ளச்செய்து அதற்கேற்றவாறு முடிவுகளை எடுத்தும், செயற்படுத்தவும் உதவி உள்ளாள் தோழி என்பது மேற்கண்ட பாடல்கள் மூலம் அறிந்துக்கொள்ளலாம்.

தோழியின் மனவெழுச்சிகள்

மனவெழுச்சியின் வகைகளாக அறிஞர்கள் பல்வேறு வகைகளை ஆய்வு செய்துஉள்ளனர். சினம், மகிழ்ச்சி, துயரம், அச்சம் போன்றவை அடிப்படை மனவெழுச்சியின் கண் உள்ளன. சமூக சக்திகளும்

ISBN Number: 978-81-977288-6-0

ஒருவரது மனவெழுச்சி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகிறது. ஒருவரது அண்டை அயலார் நடத்தைகளும் அவரது சுற்றப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளும் மனவெழுச்சிகளைப் பாதிக்க வல்லன. தலைவனின் செயல்களாலும், ஊராரின் செயல்களாலும் தோழிக்கு ஏற்பட்ட மனவெழுச்சிகள் பற்றி பல பாடல்களில் காணப்படுகின்றன. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் பாடல் ஒன்றில், கழுவப்படாத முத்துக்கள் அரும்பியிருக்கும் புன்னை மரங்கள் உடைய குளிர்ந்த நறுமணங்கமழும் கடற்கரைச் சோலைக்கு ஒரு நாள் வந்து நும் மேனியின் வண்ணம் எத்தன்மையது? என்று வினவிச் சென்றால் நின் பெருமை என்பது கெட்டப் போமோ? (நீ வாராமைக்குக் காரணம் தன யாதோ என்று வினவுகிறாள்.)

மண்ணா முத்தம் அரும்பிய புன்னைத்
தண் நறுங் கானல் வந்து,'நும்
வண்ணம் எவனோ? என்றனிர் செலினே?

(அகம்., பா. 30:13-15)

தலைவியின் மேனி வருத்தத்திற்குத் தலைவன் தான் காரணம் என்பதை உணர்ந்த தோழி தலைவன் மீது தான் கொண்ட ஆதங்கம் மனவெழுச்சி கண் சினமாக மாறி உள்ளது என்பது அறியப்படுகிறது.

கைதைஅம் படுசினைக் கடுந்தேர் விலங்கச்

ISBN Number: 978-81-977288-6-0

செலவுஅரிது என்னும் என்பது
பலகேட் டனமால் - தோழி ! -நாமே…

(அகம்., பா. 210:12-14)

உலோச்சனார் பாடல் ஒன்றில் அன்று நம் துறையினைப் பாராட்டி புகழ்ந்தவன் இன்று வரும் வலி இடர்பாடுகள் குறித்து பலரிடம் சொல்வதை நான் பலமுறைக் கேட்டு உள்ளேன். ஆதலால் தலைவன் நம் மீது தற்போது அன்பு இல்லாதவனாக இருப்பான் என்று கூறுவதிலிருந்து தலைவன் மீது தனக்கு இருந்த சினத்தை தோழி ஆதங்கமாக வெளிப்படுத்தியுள்ளாள்.

தோழிக்கு ஏற்பட்ட இன்பம்

தலைவியின் உள்ளம் ஒத்தவனான தலைவன் மணம் புரிய வருவதை அறிந்த தோழிக்கு துன்பம் நீங்கிய மகிழ்ச்சி தோன்றியது என்பதைக் குறிக்கும் பாடல்கள் உள்ளன.

செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே …

(தொல்., நூ. 1205)

எள்ளல் இளமை பேதைமை மடன் என்று
உள்ளப்பட்ட நகை நான்கு என்ப

(தொல்., நூ. 1198)

இகழ்தல், இளமை, அறியாமை, அறிந்தும் அறியாதது போலிருந்தாள் இன்னக்கிலும் சிரிப்பு ஏற்படும் என்று

ISBN Number: 978-81-977288-6-0

தொல்காப்பியர் கூறியது போல தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே மணம் நிகழ்ந்த போதில் ஊரில் அலர் பேசிய பெண்களின் நிலையை எள்ளி நகைத்தாள் தோழி என்பதும் புலப்படுகிறது

தோழியின் அவாவு நிலை

தலைவியின் மனவருத்தத்தைப் போக்க வேண்டி எண்ணிய தோழி தலைவனை இரவில் தமது ஊரில் தங்கவைக்க வேண்டும் என்ற அவாவு நிலை உடையவளாக உள்ளாள். தோழி எண்ணிய அடைவு ஊக்கி (தலைவனை இரவில் ஊரில் தங்க சொல்வது) துணிந்து செயலாற்றும் நடத்தையுடன் (Risk taking behaviour) தொடர்புடையதாக உள்ளது. எப்படியேனும் தலைவனை இருக்க வைக்க வேண்டும் என்ற மனத்திட்பம் கொண்டவளாக காணப்பட்ட தோழி தலைவனிடம் பேசி அவனது அவாவு நிலை (தலைவியுடன் இருக்க வேண்டும்) அடைய வேண்டிய வழிவகைகள் பற்றி கூறுகிறாள்.

தலைவி மாட்சிமைப்பட்ட தன் அழகு கெட, ஏக்கங் கொண்டவளாய், கண்கள் கலங்க, இடைவிடாது அழத்தொடங்கி விட்டாள். அதனால், நீ நின் வலிமை பொருந்திய வில்லினையுடைய ஏவல் இளையாரோடு இவ்விரவு நேரத்துச் செல்லாது ஒழிக.

வல்வில் இளையரோடு எல்லிச் செல்லாது,

 ISBN Number: 978-81-977288-6-0

சேர்ந்தனை செலினே சிதைகுவது உண்டோ ?...

(அகம்., பா. 120:12-13)

உலோச்சனார் பாடலிலும்,

சேந்தனிர் செல்குவிர் ஆயின்,யாமும்
எம்வரை அளவையின் பெட்குவம்;
நும்ஒப் பதுவோ ? உரைத்திசின் எமக்கே...

(அகம்., பா. 200:12-14)

இரவிலும் எம் ஊரில் தஞ்சி செல்வீராயின் யாங்களும் எம்மால் முடிந்தளவு நும்மைப் பேணுவோம். இக்கருத்து நுமக்கு உடன்பாடு ஆமோ? ஆம் எனின் எமக்குக் கூறுவீராக! என்று கூறுவதிலிருந்து தோழியின் அவாவு நிலையை அடைய தலைவனை ஒரு ஊக்கியாக பயன்படுத்தும் தன்மை அறியப்படுகிறது.

முந்நூறாவது பாடலில் நீயும் நின் இளைஞரும் புரவியும் எம் இல்லத்துத் தங்கி இன்புறுக;யாமும் நும்மை விருந்தாக ஏற்றுப் பேணுதல் போற்றுவோம் ,

இளையவரும் புரவியும் இன்புற, நீயும்
இல் உறை நல் விருந்து அயர்தல்
ஒல்லுதும்,பெரும! நீ நல்குதல் பெறினே....

(அகம்., பா. 300:20-22)

என்று கூறுவதிலிருந்து தாய் தந்தை மீதான பயம் என்னும் இயல்பூக்கம் தலைவனை விருந்தினனாக வரவேற்போம் என்று கூறும் தப்பித்தல் எனும் மனவெழுச்சியைப்

ISBN Number: 978-81-977288-6-0

பயன்படுத்தும் ஆற்றல் பெற்றவளாக தோழி இருந்தாள் என்பதும் அறியலாம். மற்றுமொரு பாடலில் இவ்விடத்தினின்று சிறிது சென்று அதோ தோன்றுகிற பூக்கள் விரிந்த புன்னை மரத்திற்கு மேலே தோன்றும் புன்னை மரத்தினின்றும் கூப்பிடும் தொலைவில் உள்ளது, அங்கு வருவாயாக!

உரும்இசைப் புணரி உடைதரும்
பெருநீர்வேலிஎம் சிறுநல் ஊரே….

(அகம்., பா. 310:16-17)

என்று கூறியுள்ளாள். நக்கீரர் பாடலில் தலைவ! நும் இருவரிடத்து பலநாளும் உளதாகும் வருத்தம் நீங்க, மயக்கும் மாலைப்பொழுதில் பாகன் தேரினைப் பூட்ட நீவிரும் ஊருக்குத் திரும்பிச் செல்வதை விரும்பாது இவ்விரவில் எம்மிடையே தங்கிச் செல்க! எனவும் கூறியுள்ளாள்.

முன்றில் தாழைத் தூங்கும்
தெண்கடற் பரப்பின், எம் உறைவுஇன், ஊர்க்கே?

(அகம்., பா. 340:23-24)

திருத்தமாகச் செய்யப் பெற்ற மணியுடைய நீண்ட தேரில் பூட்டுமாறு நின் பாகனுக்கு ஆணையிடாது, அழகு தங்கப் பெற்ற குளிர்ச்சி பொருந்திய கண்களையுடைய எம் தலைவியின் பொருட்டு இன்றிரவு எம் ஊரில் தங்கிச் செல்வாயாக!

ISBN Number: 978-81-977288-6-0

தலைவன் தலைவி மீது கொண்ட காதல் நோய் நீங்க நட்புத் தன்மையில் பரிவுடன் கூடிய சூழ்நிலையில் தலைவன் தனது திறமை மற்றும் நாட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் திருமணம் செய்ய வேண்டிய சரியான முடிவு எடுக்க சரியான வாழ்க்கைப் பாதையைத் தேர்ந்தெடுக்கவும் சிறந்த அறிவுரை பகர்பவராக இருந்துள்ளாள். தலைவனின் தனிப்பட்ட தேவைகளான தலைவியை வந்து குறியிடம் அணுக வேண்டிய முறையினை தேர்ந்தெடுக்க உதவி, தலைவன் தனது செயல்திறனுக்கு ஏற்றவாறு பொருத்தமான மனப்பான்மைகளையும் இலட்சியங்களையும் வளர்த்துக் கொள்வதற்கான சமூகத்தில் நன்மதிப்பு பெற வழிவகை செய்யும் சிறந்த வழிகாட்டியாக தோழி விளங்கியுள்ளாள். தலைவியின் குமரப்பருவத்தில் முதிர்ச்சி பெற்று முன்னணிக்கு வந்த பாலுணர்ச்சி ஏற்படுத்திய குழப்பங்களையும், வீண் கவலைகளையும் தோற்றுவித்த எண்ணங்கள் மீண்டும் எழாமல் தடுப்பதற்கு தலைவனுடன் கூடி வாழும் வாழ்க்கை தான் சிறந்தது என்பதை உணர்த்தி அவனுடன் கூடும் வாழ்க்கை குறித்து வழிகாட்டி சிறந்த அறிவுரையாளராக விளக்கியுள்ளாள் தோழி.

தலைவன் தலைவியை மனம் முடிக்க வந்த பொழுதும், மணம் முடித்த பின்னும் ஊரார் நிலையை

ISBN Number: 978-81-977288-6-0

எடுத்துக் கூறும் போது அவசர நிலையில் தோன்றிய உணர்ச்சிகள் மேலோங்கி தோழியை வெகுவாக பாதித்து கிளர்ச்சியடைய செய்து மனவெழுச்சிகளில் மகிழ்ச்சி என்ற உணர்ச்சி அதிக அளவில் ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. தலைவனைத் தலைவியின் ஊரில் தங்கவைக்க வேண்டும் என்ற தோழியின் ஆர்வம் அதிகரித்துக் காணப்பட்டதால் அதைச் செய்வதில் அவளுக்கு இருந்த ஆர்வமும், அதை உடனடியாக செய்து முடிக்க வேண்டும் என்ற உந்துதலும் ஏற்பட்டதால் அவளது கவனம் முழுவதையும் தலைவனை இருக்க வைக்க வேண்டும் என்ற செயலில் முழுமையாக இருந்துள்ளது என்பது அறியப்படுகிறது.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் முழுவதும் கண்டு கேட்டு உற்று உணர்ந்த செய்திகள் காணப்படுகின்றன. தலைவன் தலைவி அடுத்து அக வாழ்வில் இன்றியாமையாத தன்மை பெற்றவள் தோழி. தோழி எப்போதும் தலைவியின் நன்மையினை மட்டும் சிந்திக்கக் கூடியவளாக இருந்துள்ளாள். தலைவன் தோழியை அணுகி தலைவியை சேர்த்து வைக்க சொன்ன போது, தலைவி தலைவனைச் சேர்ந்து இன்பமுற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு தலைவியை இணங்க சொல்கிறாள்.

ISBN Number: 978-81-977288-6-0

தலைவி உடன்பட்டவுடன் தலைவன் பல காலம் தலைவியுடன் வந்து கூடி இன்பமுற்று சென்ற போதிலும் குறியிடத்தில் இடர்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறி தலைவியை மணந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் தலைவனுக்கு மறைமுகமாக உணர்த்த வேண்டி குறியிடம் மாற்றி வர வழிகாட்டியுள்ளாள். குறியிடம் மாற்றிய பொழுதிலும் பகற்குறி வந்து மீளும் தலைவன் இரவில் தங்கி செல்ல வேண்டும் என்ற ஆவல் மிகுந்த பொழுதிலும் அதுவும் தலைவியை மணந்துக் கொள்ள வேண்டும் என்ற அடி மனது ஆவலே மிகுந்து உள்ளவளாகவும் தலைவனிடம் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ பலவாறு பேசி தலைவியை மணந்துக் கொள்ள செய்யவதிலும் அவ்வாறு தலைவன் வரைவு வேண்டி வரும் போதும் திருமணம் முடிந்த நிலையில் அலர் கூறிய ஊர் மக்களின் நிலையை அறிந்து ஆனந்தம் கொள்ளும் போதும் சிறந்த பண்பு நலன்களை மிகுதியாகப் பெற்ற ஒரு பெண் இளம் வயதில் மிகுந்த முதிர்ந்த அறிவுடன் சூழலைச் சரியாக எதிர்கொள்ளும் பாங்கும் பெற்றவளாக உளவியல் வழி இருந்த செய்திகளைப் பொருத்திப்பார்த்ததாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ISBN Number: 978-81-977288-6-0

துணைநூற்பட்டியல்

[1] முனைவர் ச.வே.சுப்பிரமணியன். *தொல்காப்பியம் தெளிவுரை*. மணிவாசகர் நூலகம், சென்னை - 600108, 2003.

[2] பேராசிரியர் கி. நாகராஜன். *கல்வி உளவியல்*. இராம் பதிப்பகம், சென்னை-600093, 2007.

[3] முனைவர் இரா.செயபால் (உரையாசிரியர்). *சங்க இலக்கியம் அகநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600098, 2004.

[4] புலியூர்க் கேசிகன் (உரையாசிரியர்). *சங்க இலக்கியம் மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், சென்னை - 600014, 2012.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-81-977288-6-0

Ancient Agriculture through *Aggananooru*

Dr. K. Krishnamurthy, Assistant Professor of Tamil Dharmamurthi Rao Bahadur Calavala Cunnan Chetty's Hindu College, Pattabiram, Chennai-72.
ORCiD: https://orcid.org/0009-0005-5931-1641
DOI: 10.5281/zenodo.13726496

Abstract

Sangam literature portrays the way of life of the people belong to various Thinai (Landscapes). People lived in harmony with nature in all five types of land. Many historical accounts are found in "Nedundogai" of "Agananooru". "Agananooru" also present similar stories happening about inner life (agam). However, Man's first attempt of life refers to the primitive agriculture, through this labor; the four types of land division and its technology are found in Sangam period and incorporated into their lives. The various songs of "Agananooru" convey the message of the land, the nature of the soil in the land, the need for water, seasonal crops and agricultural conservation to the next generation about agriculture. In this way, this chapter aims to know about the features of "Agananooru" and the primitive agriculture mentioned in it.

Keywords: Tamils, Ancient Agriculture, *Agananooru*.

References

[1] R.Manokaran. *Nattupura Velanmai*. Tannanane Publishing House, 2001.
[2] P. Mathayan. *Sangakala Unavum Samuthaya Matramum*. Pavai Publications, Chennai, 2019.

 ISBN Number: 978-81-977288-6-0

[3] P. Mathayan. *Sanga ilakiyathil Velanmai*. New Century Book House, Chennai, 2004.
[4] S.Krishnamurthy & S. Uthayasuriyam. *Ilakiyamum Velanmayum*. Anaiththindiya Tamil Kazhagam, Thanjavur, 2000.
[5] K. Krishnamurthy. *Velanmai* (Sevviyal Ilakiyam Muthal Valakarugal Varai). New Century Book House, Chennai, 2019.
[6] V.S. Manickam. *Tamil Kathal*. Poombukar Publishing House, 2012.
[7] Puliyoorkesigan. *Agananooru*. Pari Nilayam.
[8] Engels, B. *Origin of family, private property and government*. New Century Book House, Chennai.
[9] K. Kesavan. *Mannum Manitha Uravugalum*. Chennai Book House, Chennai, 1979.
[10] M. T. S. Vimalanandam. *Tamil Ilakiya Varalaru*. Mullai Station, T. Nagar, Chennai, 2022.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

ISBN Number: 978-81-977288-6-0

அகநானூறும் அதன்வழி அறியலாகும் ஆதிவேளாண்மையும்

முனைவர் க. கிருஷ்ணமூர்த்தி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல, கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி,
பட்டாபிராம், சென்னை – 72
ORCiD: https://orcid.org/0009-0005-5931-1641
DOI: 10.5281/zenodo.13726496

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் திணை சார் வாழ்க்கை முறையினைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஐவகை நிலங்களிலும் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்தனர். சங்க இலக்கியங்களில் “நெடுந்தொகை” என்று வழங்கப்படுகின்ற அகநானூற்றில் பல வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன. அக வாழ்க்கையில் நிகழ்கின்ற அத்துணை கதைகளையும் கண் முன் நிறுத்துகின்றன அகநானூற்று பாடல் வரிகள். இருப்பினும் மனிதன் வாழ்வதற்குரிய முதல் முயற்சி உழைப்பு இந்த உழைப்பின் வழியாகக் கண்டறிந்த ஆதி வேளாண்மையைப் பற்றியும், நால்வகை நிலப் பாகுபாடு மற்றும் அதன் தொழில் நுட்பத்தைப் பற்றியும் சங்ககால மாந்தர்கள் எவ்வாறெல்லாம் தங்கள் வாழ்வோடு இணைத்து தொழில் புரிந்தனர் என்பதையும் பற்றிக்

 ISBN Number: 978-81-977288-6-0

குறிப்பிடுகிறது. நிலம், நிலத்தில் உள்ள மண்ணின் தன்மை, நீரின் அவசியம், பருவ காலப் பயிர்கள், மற்றும் வேளாண் பாதுகாப்பு போன்ற செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ள அகநானூற்றின் பல்வேறு பாடல்கள் அடுத்த தலைமுறைக்கு வேளாண்மை குறித்து எடுத்துக் கூறுகின்றன. அவ்வகையில் அகநானூற்றின் சிறப்புகளையும் ஆதி வேளாண்மையையும் குறித்து அறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

கலைச்சொற்கள்: தமிழர், *அகநானூறு*, வேளாண்மை.

நூலின் சிறப்பும் ஆய்வு நோக்கமும்

தமிழ்ச் சமுதாயத்தில் ஐவகை நிலம் சார்ந்த இனக்குழு சமுதாயத்தைக் கடந்து வர்க்க சமுதாயத்தை மேலோர், கீழோர், ஏவலர், வினைவலர், ஆண்டான், அடிமை, செல்வர், வறியவர், உழுவித்து உண்போர் உழுவோர் என பல்வேறு வர்க்க படிநிலைகள் வரலாற்றுப் போக்கில் அமைந்துவிட்ட செய்தியை சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றது. எட்டுத் தொகை நூல்களுள் அகநானூற்றுப் பாடல்களில் திணைசார்ந்த வாழ்க்கை முறைகளைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருந்தாலும், மனிதன் உயிர் வாழ அடிப்படைத் தேவைகளில் ஒன்று உணவாகும். உற்பத்தித் தொழில் தொடங்குவதற்கு முன் மனிதகுலம் வேட்டையாடி அதன்

 ISBN Number: 978-81-977288-6-0

வழி உயிர் வாழ்ந்தது. பல நூறு ஆண்டுகள் கழித்தே வேளண்மையை மேற்கொண்டனர். பண்டையத் தமிழர்கள் தான் ஆரம்பக் கால வேட்டை நிலையோடு வேளாண்மையையும் செய்து வந்தனர் என்பதை அகநானூற்று வழி நின்று நிறுவுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க இலக்கியம் 1862 அகப் பாடல்கள் உடைய காதல் இலக்கியம். இப்பாடல்களை கற்பவர் 3724 காதல் உள்ளங்களை பற்றிய அறிவு பெறுவர். மேலும் காதல் தலைமை உடையது என்றும், இருவரையும் பற்றிப் பாங்கன் நினைத்தனவும், ஊரார் கண்டார், நினைத்தனவும் ஆகிய பல்வேறு உள்ளங்களின் அறிவினையும் பெறுவர் என்று வ.சு.ப. மாணிக்கம், தமது தமிழ்க் காதல் என்ற நூலில் கூறுகிறார். அந்த வகையில் அகத்தையே பாடுபொருளாகக் கொண்ட அகப் பொருளைப் பற்றி கூறுவது: நானூறு பாடல்களைக் கொண்டது: ஆதலால் அகநானூறு என்று பெயர் பெற்றது. இந்நூலில் 400 பாடல்களும் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்ட கடவுள் வாழ்த்து பாடல் ஒன்றையும் சேர்த்து நானூற்றொரு பாடல்கள் இருக்கின்றன. சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் நெடுந்தொகை என்னும் அடைமொழியோடுடைய

 ISBN Number: 978-81-977288-6-0

அகநானூற்று பனுவலின் பகுப்பு ஒரு தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது.

அகநானூறு 13 அடிச் சிற்றெல்லையும், 31 அடிப்பேரெல்லையும் உடையது. 22 பாடல்கள் 13 அடியிலும், ஒரே ஒரு பாடல் மட்டும் 31 அடியிலும் அமைந்துள்ளன. இப்பகுப்புப் பற்றி கழித்த மும்மதக் கழிற்றியானை நிரை மணியோடு மிடைந்த அணிகிளர் பவளம் மேவிய நித்தில கோவை என்றாங்கு அத்தகு பண்பின் முத்திரம் என்று வரும் பாயிர செய்யுளின் மூலம் முதல் 120 பாக்களைச் செருக்குற்றுச் செம்மாந்து செல்லும் களிற்றியானை நிரை என்றும், அடுத்து வரும் 121 முதல் 300 வரையிலான 180 பாக்களை மணியும் பவளமும் கலந்தார் போன்று காட்சி தரும் மணிமிடை பவளம் என்றும், 301முதல் 400 வரையிலான இறுதி 100 பாடல்களை நல் முத்தின் ஒளி யெனவே பொருட்பசிறப்பால் பொலிவுற்று விளங்கும் நித்திலக் கோவை எனவும் மூன்று பிரிவுகளை உடையது. இந்நூலில் 156 பாடல்கள் தோழிக் கூற்றில் அமைந்துள்ளன. 200 பாடல்கள் பாலைத் திணையிலும் ,80 பாடல்கள் குறிஞ்சித் திணயிலும்,40 பாடல்கள் முல்லைத் திணையிலும்,40 பாடல்கள் மருதத் திணையிலும், 40 பாடல்கள் நெய்தல் திணையிலும் அமைந்துள்ளன. இந்நூலைத் தொகுத்தவர்

ISBN Number: 978-81-977288-6-0

உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திர சன்மன், தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிர பெருவழுதி ஆவர்.

நூல் அமைப்பு

1, 3, 5, 7, 9 என்ற எண்களில் பாலைத் திணைப் பாடல்களும், 2, 8, 12, 18 என்ற எண்களில் குறிஞ்சித் திணைப் பாடல்களும், 4, 14, 24 என்ற எண்களில் முல்லைத் திணைப் பாடல்களும், 6, 16, 26 என்ற எண்களில் மருதத் திணைப் பாடல்களும், 10, 20, 30 என்ற எண்களில் நெய்தல் திணைப் பாடல்களும் காணப்படுகின்றன.

அகநானூற்று சிறப்புச் செய்திகள்

பண்டைத் தமிழர் திருமணமுறைப் பற்றி 86,136 ஆகிய பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கூறும் திருமணத்தில் தீ வளர்த்தலோ, தீ வலம் வருதலோ, தட்சணை பெறப் புரோகிதர் வந்து நடத்தி வைத்த குறிப்பிகளோ இல்லை.இவை அனைத்தும் தமிழர்க்கே உரிய மணமுறை என்கிறார் P.T.சீனிவாச ஐயங்கார். தினைப்புனங் காக்கும் பெண் குறிஞ்சிப் பண் பாட, உண்ண வந்த யானை ஒன்றும் செய்யாது செயலற்று உறங்கியது.(102) பங்குனி விழா பற்றி (137) கார்த்திகை விளக்கு, சிறு பிள்ளைகளுக்குக் காத்தற் கடவுளான திருமாலின் ஐந்து படைகளின் உருவங்களும் பொறித்த ஐம்படைத் தாலி அணிவித்தல்(54) வற்றிய வயிறும்

 ISBN Number: 978-81-977288-6-0

நீராடாத உடலும் உடைய சமணத் துறவிகள் இருந்தனர் (123) போன்ற செய்திகளும் வருகின்றன.

அகம் பற்றிய இலக்கியமாக இருந்தாலும் அரிய பல வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டுள்ள நூலாக விளங்குகிறது.கங்கர்,பாணர், திரையர் பற்றிய செய்திகளும், மகத நாட்டு நந்தர்கள் தங்கள் செல்வத்தைக் கங்கையாற்றினடியில் புதைத்து வைத்திருந்ததை(265, 251) பாடல்களிலும், மோரியர் படையெடுப்பு பற்றிய செய்திகள் (69, 281, 375) பாடல்களிலும்,‘யவனர் தந்த வினைமாண் நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும்’ (148) ஆதிமந்தி (76) குடவோலைத் தேர்தல் முறை (77) தித்தன், மத்தி, நெடுஞ்செழியன் முதலியோர் பற்றியக் குறிப்புகளையும் அகநானுற்று வழி அறியலாம்.

அகநானூற்றுக்கென்று ஒரு தனிச்சிறப்புண்டு. இந்நூலில் வரும் பாடல்கள் ஐவகை நிலங்களின் இயற்கைத் தோற்றங்களை அழகாக எடுத்துக் காட்டியும், ஐவகையான நிலத்தில் வாழ்ந்த மக்களின் ஒழுக்கங்களை சுவையாக சொல்கின்றது. பண்டையத் தமிழர்களின் வரலாற்றை அறிவதற்கும் இந்நூல் பெரிதும் துணை செய்கின்றன. மூவேந்தர்களின் வாழ்க்கை வரலாறுகள்; படைத் தலைவர்களின் பெருமைகள் பற்றியச் செய்திகள் பல பாடல்களிலே காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் வாழ்ந்த வள்ளல்கள், வீரர்களின் பெயர்களும்,

 ISBN Number: 978-81-977288-6-0

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு தமிழகத்தில் சிறந்த நகரங்கள், கடல் துறைமுகங்கள ஆகியவையும் பல பாடல்களில் காணப்படுகின்றன.

காதல் திருமணம்

களவு மணத்தின் அடிப்படையான முதல் சந்திப்பைப்பற்றி அகநானூற்றுப் பாடல் ஒன்று,பூக்கள் நிறைந்த மலைச் சாரலிலே என் தோழிகளுடன் வேங்கை மலர்களைக் கொய்வதற்காகச் சென்றோம் அங்கு புலி புலி என்று சத்தமாகப் பேசிக்கொண்டே வேங்கை மலரைப் பற்றி பேசிக் கொண்டிரிந்தோம். அப்போது எங்கள் பேச்சொலிக் கேட்டு அழகு பொருந்தியவன் எங்களிடம் வந்து நீங்கள் சொல்லிய புலி எங்கே சென்றது என்று எதிரே வந்து கேட்டான்.

… ஐவகை வகுத்த கூந்தல், ஆய்நுதல்
மையீர் ஓதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன்; பையெனப்
பரிமுடுகு தவிர்த்ததேரன் எதிர் மறுத்து,
நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றோன் மன்ற அக்குன்று கிழவோனே

(அகம்., பா. 48)

அவனைக் கண்ட நாங்கள் முகத்தை மறைத்துக் கொண்டு நின்றோம். அவன் எங்கள் நிலையைக்கண்டு மிகவும் அன்புடன் “ஐவகையாகக் கூந்தலை அழகு செய்து

 ISBN Number: 978-81-977288-6-0

முடித்துக் கொள்ளும், கருமையும் குளிர்ச்சியும் பொருந்திய தலைமுடியை உடையவர்களே! அழகிய நெற்றியை உடையவர்களே! அழகுள்ளவர்களே!” என்று கேட்டான். பின்னர் மெதுவாக குதிரையை செலுத்தும் தேரையுடையவன் எங்களை நேரே பார்த்தான் உன் மகளுடைய மையுண்ட கண்களை பல முறை நோக்கினான்; அவளும் நோக்கினாள்.பிறகு அந்த மலை நாட்டின் தலைவன் போய்விட்டான். என்று தலைவனும் தலைவியும் சந்தித்ததைப் பற்றித் தோழி செவிழித் தாய்க்குக் கூறியது போல இப்பாடல் கூறுகிறது.

கற்பு மணம்

களவு மணம் புரிந்துகொண்ட தம்பதிகள் விரைவில் கற்பு மணம் செய்து கொள்ளுவார்கள். தலைவன் பெண்ணின் பெற்றோரின் சம்மதம் பெற்று அவளை மணந்து கொள்வான். அவர்கள் சம்மதிக்காவிட்டால் தலைவன் அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய்விடுவான்.அதன் பின் தலைவனும் தலைவியும் வெளிப்படையாக வாழ்ந்து இல்லறம் நடத்துவர். களவின்றிக் காதலனும் காதலியும் ஒன்று சேர்ந்து வாழ்வதே கற்பு மணமாகும்.

நாள் இடைப்படின் என் தோழி வாழாள்;
தோளிடை முயக்கம் நீயும் வெய்யை;
கழியக் காதலராயினும், சான்றோர்

 ISBN Number: 978-81-977288-6-0

பழியொடு வரூஉம் இன்பம் வெக்கார்
வரையின் எவனோ வாந்தோய் (அகம்., பா. 112)

எனும் பாடல் நீ ஒருநாள் வராமல் போனால் என் தோழி உயிர் வாழ மாட்டாள். அவளுடைய தோளைத் தழுவிக் கொண்டு பிரியாமல் வாழ்வதிலே நீயும் ஆவலுடையவன். எவ்வளவுதான் அளவு கடந்த காதலர்களாயினும் சரி, அறிவுடையோர் பிறர் பழிக்கும்படி அடைகின்ற இன்பத்தை விரும்பமாட்டார்கள். ஆதலால் வானளாவிய மலையையுடையவனே! நீ மணம் செய்வதற்குத் தடையென்ன என்று தோழி தலைவனிடம் ஊரார் அறிய திருமணம் செய்ய வேண்டும் என்று வலியுருத்துவதாக அமைந்துள்ளது.

அகநானூற்றுப் பாடல்களில் காதலர் பிணைப்பு, திருமணச் சடங்குகள், புத்திரப் பேறு, செல்வத்தின் சிறப்பு, வருமையின் கொடுமை, நீதியுரைகள் போன்றச் செய்திகளும் இடம் பெற்றிருக்கின்றன. இராமாயணம் மகாபாரத கதைகள் பற்றியக் குறிப்புகளும் காணப்படுகின்றன. தமிழர்களின் பழக்க வழக்கங்கள், வடவேங்கடத்திலிருந்து தமிழர்களின் நிலபரப்பு ஆரம்பமாகிறது என்ற செய்தியும் அகநானூற்றுப் பாடல்களில் காணப்படுகிறது. அகநானூற்றுப் பாடல்கள் அகப்பொருள் ஒழுக்கத்தை மட்டுமே சொல்லாமல்

 ISBN Number: 978-81-977288-6-0

அகப்பொருளோடு புறப் பொருள் செய்திகளையும் கூறுகின்றன.

ஆரம்பக்கால நிலை

மனிதன் மிருக நிலையிலிருந்து மாறியபோக்கின் இறுதிக் கட்டத்தில் ஆதி மனிதனின் வாழ்க்கை கூட்டு வாழ்க்கையாக அமைந்தது. அவ்வாறான சூழலில் வேட்டையாடுவதில் வில், அம்பு ஆகியவற்றின் வளர்ச்சி, தீயைப் பயன்படுத்துதல் மற்றும் மொழியின் ஆரம்பமும் இச்சூழலில்தான் ஆரம்பமானது எனலாம். இந்த வளர்ச்சி நிலையை”வெறும் அறிவு முயற்சியின் விளைவுகள் அல்ல இது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் முதல் படிகளாகும்” என்று எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். ஆகவே உணவு சேகரிக்கும் நிலையானது மனிதன் தோன்றிய காலத்திலிருந்து தற்போது வரை நீடித்திருப்பதைக் காணமுடிகிறது.

தமிழக மக்கள் நாகரிக நிலையின் உச்சத்தில் பண்டைய நாளிலேயே வாழ்ந்ததற்கான ஆதாரங்களும் உள்ளன. உலக வல்லுனர்கள் வகைப்படுத்தும் மானுட வளர்ச்சிப்படிநிலைகள் சங்க இலக்கியங்களின் வழியே ஐந்துவகை நிலைகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1. உணவு சேகரிக்கும் நிலை.

2. வேட்டையாடும் நிலை.

3. காடுகளை எரித்துப் பயிர செய்யும் நிலை.

 ISBN Number: 978-81-977288-6-0

4. கால்நடை வளர்ப்புநிலை.

5. பயிர்த்தொழில் செய்யும் நிலை.

சங்க இலக்கியங்களில் உணவு சேகரிக்கும் வாழ்க்கைநிலை, வேட்டையாடும் வாழ்க்கை நிலை, காடுகளை எரித்துப் பயிர் செய்யும் வாழ்க்கை நிலை,பயிர்த்தொழில் செய்யும் வாழ்க்கை நிலை ஆகியவற்றை ஆங்காங்கே காண முடிகிறது என்ற கூற்று அரண் செய்வதாக உள்ளது (இரா. மனோகரன். 2001: 7) என்றும், உலக மனித சமூக இயலுடன் சங்க கால மானுட வாழ்க்கை ஒப்பிட்டு பார்க்கதக்கதாயுள்ளது என்கிறார்.

நிலப்பாகுபாடு

தமிழர்களின் தொன்மை வாய்ந்த இலக்கண நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் நிலத்தை நான்கு வகையாகப் பாகுபடுத்தியுள்ளதை,

… முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

என்று தொல்காப்பியர் (நூ. 5) குறிப்பிடுகிறார். இந்த நான்கு வகையான நிலப்பாகுபாட்டை வரையறுத்துச் சொல்லும் தொல்காப்பியர் பாலை நிலத்தை குறிப்பிடாததாலும் தமிழ்நாட்டில் பாலை நிலம் இல்லை என ஒரு சாரார் கருதுவர். இவ்வாறான கருத்தை மற்றொரு சாரார் மறுத்துரைப்பர். இயற்கை நெறிக் காலத்திலேயே தமிழ்நாட்டுப் பாலை நிலம் மக்கள்

ISBN Number: 978-81-977288-6-0

குடியிருந்து வாழ முடியாத நிலமாக மாறி வந்திருத்தலும் வேண்டும்.

குறிஞ்சி

உணவு சேகரிப்பும் வேட்டையும்

வேட்டையாடுதலே இனக்குழுவின் ஆரம்பக் காலச் செயல்பாடாக இருந்தது. வேட்டை நிரந்தரமாக கிடைக்காமல் போகும்போது வேட்டையாடுதல் உணவுத் தேவைக்கான தொழிலாகத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட சமுதாயமாக இருந்துள்ளது. மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி ஆகும். தமிழ் இலக்கண இலக்கியங்கள் வேட்டைச் சமூகத்தினரைக் குறிஞ்சி நிலத்தவர் என்றும், அவர்கள் வாழ்ந்த பகுதியினைக் குறிஞ்சி நிலம் என்றும் குறிப்பிட்டுள்ளன.

காடு தேர் வேட்டத்து விளிவு இடம் பெறா அது
அதள் படுத்த சேக்கை (அகம்., பா. 58; 3-4)
ஓட்டு இயல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன்… (அகம்., பா. 182; 5-6)

வேட்டைக் காடுகள் சூழப்பட்ட இடத்தில் மனிதன் முதலில் பழம், கொட்டை, கிழங்கு ஆகியவற்றை உண்டான். ஊனையும் உண்ணத் தொடங்கினான். பிற விலங்குகளிடமிருந்து காத்துக் கொள்வதைவிட உணவுக்கு ஊன் பெறுவதற்காகவே வேட்டைக்காரன் ஆனான் என்பதைச் சுட்டுகிறது.

 ISBN Number: 978-81-977288-6-0

வயவாள் எறிந்து வில்லின் நீக்கி
யநிறை தழீஇய கடுங்கண் மறவர்
அம்புசேண் படுத்த வன்புலத்து உய்த்தெனத்
தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பிற்
கொழுப்பா எறிந்து குருதி (அகம்., பா. 309)

எனும் பாடல்,பண்டைய மக்கள் உணவுத் தேடலுக்காக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு போகும்போது வாளும்,அம்பும் பாதுகாப்புக் கருவியாக எடுத்துச் சென்றனர்.அவ்வாறு செல்கின்ற போது நிரை காவலரை விரட்டிச் சென்று காட்டு நிலத்தை அடைந்தனர்.அங்கு கொழுத்த ஒரு பசுவினைக் கொன்று அதன் குருதியை தெய்வத்திற்கு பலியிட்டு அதன் புலாலினை புழுக்கி உணவாக உணடனர் என்ற செய்தியை வெளிப்படுத்துகிறது.

குறிஞ்சி மக்கள் தோட்டப் பயிர்களையும் பயிரிட்டனர். வன்புல வேளாண்மையிலும் ஈடுபட்டனர். வீட்டு விலங்குகளையும் வளர்க்கத் தொடங்கினர். பண்டைத் தமிழரின் மலைச் சார்ந்த குறிஞ்சிப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரமாக பரிணமித்தது. குறிஞ்சியில் ஏற்பட்ட இக்கலப்புப் பொருளாதாரம் முல்லை, மருதம், நெய்தல் என மற்ற திணைகளிலும் தொடர்ந்தது. இன்றும் கூட பல்வேறு தரப்பு மக்களும் கலப்பு பொருளாதாரத்தைச் சார்ந்திருக்கின்றனர். இதன்

ISBN Number: 978-81-977288-6-0

பிரதிபலிப்பை உணவு முறையிலும் காணலாம். உணவு முறை ஆதியிலிருந்தே கலப்பு ஆதாரத்தை அடிப்படையாக ஏற்றுக் கொண்டு வந்துள்ளது.

நெல்

நெல் எனும் சொல் சங்க இலக்கியங்களில் 102 இடங்ககளில் ஆளப்பட்டுள்ளது. மூங்கில் நெல்லைக் குறிப்பிட இச்சொல் 6 இடங்களில் ஆளப்பட்டுள்ளது. செந்நெல் 21 இடங்களிலும் ஐவன வெண்ணெல் 24 இடங்களிலுமாக மொத்தம் 145 இடங்களில் நெல் பற்றிய சொல் பயின்று வந்துள்ளது. நெல் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய உணவு வகையாகத் தோன்றுகின்றது. ”மனிதன் கால்நடை நிலம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள உறவு முறையில் மிக முக்கியத்துவம் பெற்று உழுது பயிரிடும் வேளாண் பொருளாதாரத்திற்கும் நாகரிகத்திற்கும் அடிகோலுகிறது என்பர் என பர்டன் ஸ்டெயின் கூறும் கருத்தைச் சுட்டிக் காட்டி வளர்ந்து வந்த சங்க சமுதாயப் பொருளாதாரத்தில் நெல் பெற்ற முக்கியத்துவத்தைக் (மண்ணும் மனித உறவுகளும், 17) விளக்கியுள்ளார்.

குறிஞ்சி உணவு உற்பத்தியைக் காட்டிலும் உணவு சேகரிப்பிலேயே கவனம் கொண்டதாக இருந்திருந்தாலும், இயற்கை விளைபொருளோடு

 ISBN Number: 978-81-977288-6-0

புன்செய் வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டு இருந்துள்ளது.

குறிஞ்சி நில வேளாண்மை அல்லது பழங்குடி வேளாண்மை பொதுவாக இடத்தை நிலத்தைத் தயார் செய்வதற்கு ஆங்காங்கே நிலத்தை தீயிட்டு அங்குள்ள முட்புதர்களை கொழுத்தி விடுவார்கள்.அது எரிந்து சாம்பலான பிறகு அதில் விதைகளை விதைப்பார்கள்.

இருங்கல் அடுக்கத் தென்னையர் உழுத
கரும்பெனக் கவினிய பெருங்குரல் ஏனல்
கிளிபட விளைந்தமை அறிந்தும் செல்கென
நம்மவண் விடுநள் போலாள் கைம்மிக

(அகம்., பா. 302:9-2)

இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியோடு

(அகம்., பா. 394:3)

எனும் பாடல் குறிஞ்சி நிலக் கானவர்கள் நிலத்தைத் தீயிட்டு எரித்துப் புனம் என்கின்ற புன்செய் நிலத்தை உருவாக்கிய நிலையையும், ஆண்கள் தினையை உழுது, விதைத்து, புன்செய் விளைநிலமாக விளங்கியதையும், வேளாண்மை சிறப்புற்றிருந்ததையும் அறிய முடிகிறது.

முல்லை

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப் பட்டது. மேய்ச்சல் நிலங்களை உடையதால் அது கால்நடை வளர்ப்புக்கு உரியதாக மாறிய நிலைக்கு

ISBN Number: 978-81-977288-6-0

முந்தைய காலக்கட்டத்தில் இதுவும் வேட்டையை உணவுத் தேடலுக்கான வழிமுறையைக் கொண்டிருந்தது. கான் கானம் பற்றிக் குறிப்பிடும் ர. பூங்குன்றன் முல்லை நிலத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது ”கான் கானம் ஆகிய நிலப்பரப்பு பல இடங்களில் மலையையும் குன்றுகளையும் சார்ந்தவையாகவே குறிக்கப்படுகிறது. கானத்தில் வாழ்ந்தவர்கள் கானவர் என்று சங்க இலக்கியம் சுட்டும். கானவர் மட்டுமின்றி குறவர், வேட்டுவர், எயினர், வேடர் ஆகிய மக்களும் வாழ்ந்துள்ளனர். இம்மக்கள் காடுகளில் உள்ள இயற்கை வளத்தினைத் தங்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்கு பயன்படுத்தினர். மழையால் பொலிந்த கானம் என்று கூறும் பாடல்கள் அனைத்தும் முல்லைத் திணையைச் சேர்ந்தவை என்பது குறிப்பாகும். கானத்தில் ஏனல், தினை, வரகு ஆகியவை பயிரிடப்பெற்றன. கானம் என்பது கால்நடை வளர்ப்பு சிறப்புற்றிருந்தமை பற்றிப் பல சங்கப்பாடல்கள் விரிவாகப் பேசியுள்ளன. (1999: 35, 36) என்கிறார்.

தினைக்க ளுண்ட தெறிகோல் மறவர்
விசைத்த வில்லர் வேட்டம் போகி
முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டும்
காமர் புறவி னதுவே (அகம்., பா. 284: 8-11)

 ISBN Number: 978-81-977288-6-0

`எனும் பாடல் முல்லை நிலத்தில் உடும்பு, முயல், மான் ஆகியவை வேட்டையாடப்பட்டதைக் காட்டுகின்றன. தொடக்ககாலத்தில் மக்கள் நிலைத்து வாழ்வதற்கான ஏற்ற வளமெல்லாம் பொருந்தியதாக விளங்கியது. மேலும், இயற்கை வளம், கால்நடை வளர்ப்பு, புன்செய் வேளாண்மை எனும் பொருளாதார அடிப்படையாக அமைந்தது எனலாம். கால்நடை வளர்த்தல் முல்லைக்குறிய ஆரம்பக் கால வாழ்வாதாரமாக இருந்தாலும், (அகம். 194) பிற்காலத்தில் ஏர் கலப்பைக் கொண்டு உழுது பயிரிடும் வேளாண்மையும் ஏற்பட்டது.

மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் ஆகும். தீம்புனல் உலகமாகிய மருத நிலத்தில் அதாவது ஆற்றங்கரைகளிலும் மக்களுடைய நாகரீகம் தோன்றி வளர்ந்தது என்று சரித்திரம் கூறுகிறது. ஏனென்றால் ஆற்றங்கரையும் ஏரிக்கரையுமாகிய நீர்வளமுள்ள மருத நிலத்திலே தான் உணவுப் பயிர்கள் பயிராயின. உணவுத் தட்டுப்பாடின்றி கிடைத்த இவ்விடங்களிலே மக்களின் நாகரிகம் தோன்றி வளர்ந்ததைச் சரித்திரக்காரர்கள் எல்லோரும் கூறுகிறார்கள். இது உலகத்தில் எல்லா நாடுகளிலும் நிகழ்ந்த நிகழ்ச்சி. இந்த முறைப்படிதான் தமிழ்நாட்டிலும் மருத நிலங்களில் உணவுப்பொருள்கள் அதிகமாக விளைந்தன என்ற சீனி.வேங்கடசாமி

ISBN Number: 978-81-977288-6-0

கருத்திற்கிணங்க நல்ல வளமான நிலத்தைக் கொண்ட மருத நிலத்தில் அம்மக்கள் தங்களின் இன்றியமையாத தொழிலான உழவுத்தொழிலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். மருத நிலத்தில் வாழும் பண்டைத் தமிழர் விளை நிலத்தை தேர்வு செய்யும் போது நன்னீர்கள் இருக்கும் இடத்தையே தேர்வு செய்து வயல் பரப்பை உருவாக்கினர் என்பதை அறியலாம்.

செந்நெல்

செந்நெல்லை நீர் வளமுள்ள வயலில் விளைவிப்பர். விளைந்த செந்நெல் சிவந்து கதிர்கள் வளைந்து இருக்கும். **பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளான் (அகம்., பா. 126-11)** நெல்லில் சிவந்த நெல் சிறந்த நெல் என்றும் கூறப்பட்டுள்ளது.

கரும்பு

மருதநிலத்தில் செந்நெல்லும் கருப்பும் வேளாணமை செய்யப் பெற்றிருக்கின்றன. கருப்பு வேளாண்மை குறித்த செய்திகள் சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றுள் அகநானூற்றுப் பாடல்களிலும் கரும்புப் பற்றியச் செய்திகள் காணப்படுகின்றன.

இருங்கதிர் அலமரும் கழனிக் கரும்பின்
விளைகழை பிழிந்த அந்தீஞ் சேற்றோடு
பல்பெய் செந்நெல் பாசவல் பகுக்கும்

 ISBN Number: 978-81-977288-6-0

...உறந்தை (அகம்-237)

...தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பைப்,பெருப்பெயர்க் கள்ளூர்
(அகம்., பா. 256: 1415)

இப்பாடல்களில் உறந்தை,கள்ளூர் எனும் ஊர்கள் கரும்பு அதிகம் விளைந்த ஊர்களாகவும், கரும்புப் பயிரை விளைவிக்கக்கூடிய வயல்களையும், நெல்லை விளைவிக்கூடிய வயல்களையும் உடையவனாக நிலங்கள் இருந்தன. நெல் வயல்களில் நெற்பயிருக்கு வேலியாகவும் கருப்பு நடப்பட்டிருந்தது. எனவே, கரும்புப் பயிர் முதன்மைப்பயிராகவும் வேளாண்மை செய்யப்பட்டிருப்பது இதன் மூலம் தெரிகிறது.

தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் போலிய போர்ப்பழித்து
கள்ளார் களமர் பகடுதளை மாற்றி
கடுங்காற்று எறியப் போகிய துரும்புடன்
காயற் சிறுதடிக் கண்கெடப் பாய்தலின்
(அகம்., பா. 366)

"செழுஞ்செய் நெல்லின் சேயரிப் புனிற்றுக் கதிர்" என்ற அகநானூற்றுப் பாடல்களில் உழவர்கள் நெற்கதிர்களை அறுக்கும் நிலை, வயல்களில் வேளாண்மைக்கான நீரைத் தேக்கி வைத்தமை, நெற்கதிர்கதிர்களை களத்தில் இட்டு தூற்றும்

 ISBN Number: 978-81-977288-6-0

நிகழ்வு,நெற்குவியல்களைக் காக்கும் காவலர்கள் பற்றியச் செய்தி,அதிகமான நீர் வரத்து சமயத்தில் அதனைத் தடுத்து அணைபோட்டச் செய்தி என்று வேளாண்மை செய்வதற்கான அத்தனை நிகழ்வுகள் பற்றியும் படம் பிடித்துக் காட்டுகிறது.

வளத்தின் குறியீடு:

வளத்தின் குறியீடாகக் கருதப்பட்ட நெல் சடங்குச் சூழல்களிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மருத நிலச் சமுதாயங்களில் வழிபாட்டுச் சூழல்களில் கடவுளர்களுக்கு நெல் தூவி வழிபட்டதை,

… நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி
பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நல்மணம் கழிந்த பின்றை

(அகம்., பா. 86: 12-17)

எனும் பாடலில் நீரில் நெல் கலந்து சொரியப்பட்ட வளச்சடங்கைப் பற்றி தெளிவுப்படுத்துகிறது. குறிப்பாக நெல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. வேந்தர்களும் நெல்லை அடிப்படையாகக் கொண்டும் புகழப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

மழை

வேளாண்மைக்கு மழை பொழிவு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மழை இல்லையென்றால் மானுடம் செழிப்படையாது. மழை இல்லையேல்

ISBN Number: 978-81-977288-6-0

இம்மண்ணில் உள்ள உயிர்கள் கலையிழந்து கடின நிலைக்கு ஆளாகும். ஆதலால் மழைப் பொழிவைப் பற்றியும், உழவுக்குத் தேவையான மழை நீர் கிடைத்ததை சங்க இலக்கியங்கள் பல இடங்களில் பெருமையாகவும், உவமையாகவும் வெளிப்படுத்தியுள்ளன.

நெடுநெல் அடைச்சிய கழனி ஏர் புகுத்து,
குடுமிக் கட்டிய படைப்பையொடு மிளிர,
அரிகால் போழ்ந்த தெரிபகட்டு உழவர்

(அகம்., பா. 41. 4-6)

எனும் பாடல் உலகத்தில் அனைத்து தொழில்களிலும் முதன்மையானத் தொழில் உழவுத் தொழிலாகும். அத்தொழில் புரிவதற்கு ஏர் கலப்பை என்ற உழவுக் கருவி முக்கியமானதாகும்.. அந்தக் கருவி மிகுந்த பயன்பாட்டோடு இருக்க வேண்டுமானால் பருவத்தே மழை பெய்தால்தான் பயன்படும்.ஆகையால் பருவ மழையின் பயன்பாடு, கலப்பையின் பயன்பாடு பற்றியும் இப்பாடல் உணர்த்துகிறது.

நிலனும் விசும்பும் நீர் இயைந்து ஒன்றி
குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அலலது
கதி மருங்கு அறியாது அஞ்சு வரைப்பாஅய்
தனி மயங்குகின்றே தண்டுரல் எழிலா

(அகம்., பா. 43: 5-8)

ISBN Number: 978-81-977288-6-0

என்ற இப்பாடல்,கார் காலம் வந்தது ஆதலால். மேகம். மேல் எழுந்து பெய்தது. வானும் நிலனும் பொருத்த நீர்த்தாரை பொருந்தியது. கதிரவன் எங்குள்ளான் என்பதை அறியமாட்டாது. கன்னல் என்ற நாழிகை வட்டிலால் பொழுதை அறிவதையன்றி, வேறு வகையால் பொழுதை அறிய இயலவில்லை. இத்தகையப் பெரு மழையால் உலகம் அஞ்சியது என்று அகநானூறு மழையைப் பற்றிக் கூறுகிறது.

வேளாண் தொழில் முறைகள்

உழுதல், உரமிடுதல், நீர்பாய்ச்சுதல், விதைவிதைத்தல், களை எடுத்தல், பயிர்களைக் காத்தல், அறுவடை செய்தல், தானியங்களைப் பதப்படுத்துதல் ஆகியன வேளாண் தொழில் முறைகளாகும்.இத்தொழில் முறை என்பது எல்லா வகையான வேளாண் நிலங்களுக்கும் பொருந்தும்.

போர் உறை தலைஇய பெரும்புலர் வைகறை,
ஏர் இடம் படுத்த இருமருப் பூழிப்
புறமாறு பெற்ற பூவல் ஈரத்து,
ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்

(அகம்., பா. 194: 1-5)

என்ற அகநானூற்றுப் பாடல், உழப்பட்ட செம்மண் நிலத்தின் தன்மையைக் கூறும்பொழுது பெருமழை பெய்ததும் மறுநாள் காலையில் உழவர்கள் ஏரைப்பூட்டிக்

ISBN Number: 978-81-977288-6-0

கீழ்மண் மேலும், மேல்மண் கீழும் புரளுமாறு நன்கு உழுவர் எனவும் அவ்வாறு உழப்பட்ட செம்மண் நிலம் ஊனைக் கிழித்துவிட்டது போன்ற காட்சி அளித்ததாகவும் கூறுகின்ற இச்செய்தி பண்டையத் தமிழர்கள் நிலத்தை உழுவதற்கான சிறந்த தொழில் முறையைக் எவ்வாறு கையாண்டனர் என்பதை உணரலாம். மேலும் உழு கருவிகளை ஏர் என்றும், கலப்பை, என்றும், கொழு என்றும் வேளாண் கருவிகளின் பெயர்களும் காணப்படுகிறது. பண்டைய கால வேளாண் மக்கள் வேளாண்மைத் தொழிலுக்கு தங்கள் உடல் உழைப்போடு வேளாண் கருவிகளின் துணையோடும் தொழில் புரிந்து வந்துள்ளனர்.

எருவிடுதல்

மன் வளமாக இருக்க வேண்டுமானால் அம்மண்ணில் எருவிட வேண்டும். அப்போதுதான் நிலம் நல்ல சத்துக்களைக் கொண்ட நிலமாக விளங்கும். அப்போதுதான் பயிர்கள் நன்கு விளையும் கூடியதாக இருக்கும் என்பது உண்மையான ஒன்றாகும்.

முதைபட பசுங்காட்டு அரில்பவர் மயக்கி
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரப்பி (அகம்., பா. 202: 1-3)

நிலத்தில் வளரக்கூடிய செடி, கொடிகளை எருவாகப் பயன்படுத்த அந்தப் பழமையான இலை தழைகளை

ISBN Number: 978-81-977288-6-0

அப்படியே வயலில் போட்டு எருதுகள் பூட்டிய பல ஏர்களைக் கொண்டு உழுவர். அவ்வாறு உழுதபின் இடுதலை மேற்கூறிய பாடல் வழி அறிந்து கொள்ளலாம்.

பயிரிடல், மற்றும் மாற்றுப் பயிரிடும் முறை

பண்டைய காலத்தில் புன்செய், நன்செய் நிலங்களுக்கு ஏற்ப பயிரிடும் முறைகளை உழவர்கள் கையாண்டுள்ளனர். புன்செய் நிலங்களில் விதைகளை அப்படியே விதைத்தல், நன்செய் நிலங்களில் நெல்லை நாற்றுவிட்டு நடவு செய்தல் மற்றும் மற்ற பயிர்களையும் பயிரிட்டுள்ளனர். மேலும், நெல் வயல்களில் மாற்றுப் பயிராக வாழை, கரும்பு, உழுந்து, அவரை, மொச்சை போன்ற பயிர்களையும் மாற்றுப் பயிர்களாகப் பயிரிட்டுள்ளனர்.

நெய்தல்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் ஆகும். இந்நிலத்திற்குரிய தொழில் மீன்பிடித்தலும், உப்பு விளைவித்தலும் ஆகும். எனினும் வேளாண்மையும் செய்துள்ளனர்.

எல்லுத்தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்உளிக் கடுவிசை மாட்டலின், பாய்புஉடன்,
கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கடல் அசைவளி எறிதொறும், வினைவிட்டு,
முன்றில் தாழைத் தூங்கும்

ISBN Number: 978-81-977288-6-0

தெண்கடற் பரப்பின், எம் உறைவின், ஊர்க்கே?

(அகம்., பா. 340; 9-24)

கடல் மீன் வேட்டை எவ்வளவு சிக்கலானது என்பதை வெளிப்படுத்தும் இந்தப் பாடல் பகலில் கூர் உளியையும் கொடுமுடி நெடுவலையையும் கொண்டு சுறா வேட்டையில் ஈடுபட்ட பரதவர் சுறாமீன் வலையைக் கிழித்ததனாலும் கடற்காற்றின் வேகத்தாலும் மீன்வேட்டையய் விட்டுத் தாழை மரத்தின் அடியில் உறங்கும் நிலையைக் காட்டுகிறது

பாலை

முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும். குறிஞ்சி நிலமும் மழையின்மையால் திரிந்து தத்தமது இயல்பை இழந்து மாறியதே பாலை நிலமாகும். பாலை நில மக்கள் முழுக்க முழுக்க கொள்ளையடித்தலில் மட்டுமே ஈடுபட்டிருக்கவில்லை. அவர்கள் பிற விலங்குகளையும் வேட்டையாடி உள்ளனர். ஆறலைக் கள்வர்கள் மான் வேட்டையாடியதை,

அவ்விளிம் புரிஇய விசையமை நோன்சிலைச்
செவ்வா பகழிச் செயிர்நோக் காடவர்
கணையிடக் கழிந்தென் வீழ்துணை யுள்ளிக்
குறு நெடுந்துணைய மறிபுடை யாடல் (அகம்., பா. 371)

என்ற பாடல் குறிப்பிடுகிறது.

ISBN Number: 978-81-977288-6-0

பயிர்ப் பாதுகாப்பு

வேளாண்மை செய்வதற்கு அடிப்படையாக விளங்கும் நீர் நிலைகளை கண்ணும் கருத்துமாக காவல்நின்று காத்தனர். அவை அனைகளாகவும் குளங்களாகவும், மடைதிறந்து ஓடக்கூடிய வெள்ளப் பெருக்காகவும் இருந்தது.

…பெருங்குளம் கவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே
(அகம்., பா. 252)

எனும் பாடல் நீர் நிலைகளை இரவும் பகலும் காவல் செய்து நீரை ஒழுங்குப்படுத்தும் காவலர்கள் இருந்ததனர் என்பதை உணர்த்துகிறது.

இலங்கு வளை நெகிழ்ந்த செல்லல் புலம்படர்ந்து
இரவின் மேயல் மரூஉம் யானைக்
கல்வல் இயக்கம் ஒற்றி நடுநாள்
வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன்
கடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல்
(அகம்., பா. 292)

பயிர்கள் நன்கு வளர்ந்தாலும், பலவகையில் சேதம் ஏற்படுவதுண்டு. மான் வருடை முதலிய விலங்குகளும், கிளிகளும், குருவிகளும், காட்டுப் பன்றிகளும், யானைகளும் கதிர்களைத் திண்ணும். இவற்றைத் தடுக்க இரவும் பகலும் பரண்கள் அமைத்துக்கொண்டு காவல்

ISBN Number: 978-81-977288-6-0

காத்திருந்து வேளாண் விளைபொருளைக் காத்தனர் என்பதை இப்பாடல் தெளிவுப்படுத்துகிறது.

கவண் கல் எறிதல்

வல்வாய் கவணின் கடுவெடி ஒல்லென மறப்புலி
உரற, வாரணம் கதற (அகம்., பா. 392: 14-15)

இப்பாடல்களின் முறையே, வலிமை முழுவதையும் திரட்டி விடுக்கப்படும் கவண்கல் மூங்கிலை உடைக்கும் ஆற்றல் உடையது. இரவு நேரத்தில் தினைப்புனத்தை மேய்ந்த யானையை அடித்த கவண்கல் மூங்கிலை முறித்த செய்தியையும்,இவற்றைத் தவிர தினைப் பறையைக் கொட்டி வயலில் விளைந்த கதிர்களை உண்ண வரும் பறவைகளை ஓட்டுவர் என்ற செய்தியையும்,யானைகள் கவன்கல்லின் ஓசைக்கு அஞ்சி கதறும் என்ற செய்தியையும் அறியலாம்.

முடிவுரை

பண்டைத்தமிழரின் உழவுத் தொழில் நுட்பச் சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில், உழுதல், விதைத்தல் நெல் விளைவிக்கப்பட்ட விளைந்த வயல்களில் கரும்பு, செய்திகளையும் அகநானூற்றுப் படல் குறிப்புகள் எடுத்தியம்புகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலப் பிரிவுகளும் அவற்றை ஒட்டி அமைந்த மக்கள் பிரிவுகளும் தினை, துறை காட்டும் பழக்கவழக்கங்களும் அதனுடைய

ISBN Number: 978-81-977288-6-0

ஒழுக்கங்கள் ஆகும். தமிழன் எவ்வாறு படிப்படியாகச் சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்களை நிகழ்த்தி சமுதாயத்தைக் கட்டமைத்து கடலையும், ஆற்றையும் வென்று ஆளுமைச் செலுத்தினான் என்பதை சங்க இலக்கியங்கள் பெருமிதத்துடன் எடுத்துக் கூறுகின்றன. வேளாண்மை, வாணிபம், கைத்தொழில், ஆகிய தொழில்களைக் கண்டடைந்து அவற்றிற்கு தேவையான கருவிகளையும் கண்டுபிடித்து எவ்வாறு வேளாண்மைச் சார்ந்த வாழ்க்கை முறைகளைக் கடைபிடித்தனர் என்பதை அகநானூற்றின் வழி அறிந்துகொள்ள முடிகிறது

துணைநூற்பட்டியல்

[1] இரா. மனோகரன். *நாட்டுப்புற வேளாண்மை.* தன்னனானே பதிப்பகம், 2001.

[2] பெ.மாதையன். *சங்க காலம் உணவும் சமுதாய மாற்றமும்.* பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2019.

[3] பெ.மாதையன்.*சங்க இலக்கியத்தில் வேளாண்மை.* நியு செஞ்சூரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[4] சா.கிருஷ்ணமூர்த்தி & சா. உதயசூரியன். *இலக்கியமும் வேளாண்மையும்.* அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர், 2000.

 ISBN Number: 978-81-977288-6-0

[5] க.கிருஷ்ணமூர்த்தி. *வேளாண்மை* (செவ்வியல் இலக்கியம் முதல் வழக்காறுகள் வரை). நியூ செஞ்சூரி புக் ஹவுஸ், சென்னை, 2019.

[6] வ. சுப. மாணிக்கம். *தமிழ்க் காதல்.* பூம்புகார் பதிப்பகம், 2012.

[7] புலியூர்க்கேசிகன். *அகநானூறு.* பாரி நிலையம்.

[8] எங்கல்ஸ், பி. *குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்.* நியூ செஞ்சூரி புக் ஹவுஸ், சென்னை.

[9] கோ. கேசவன். *மண்ணும் மனித உறவுகளும்.* சென்னை புக் ஹவுஸ், சென்னை, 1979.

[10] ம.து.ச.விமலானந்தம். *தமிழ் இலக்கிய வரலாறு.* முல்லை நிலையம், சென்னை, 2022.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-81-977288-6-0

Allegorical Quality in *Aganaooru*

Dr. R. Samraja, Assistant Professor, Department of Political Science, Periyar Maniammai Deemed University, Vallam, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0006-3744-6913
DOI: 10.5281/zenodo.13726702

Abstract

One of the five pillars of Tamil is Ani Grammar (Ilakanam). One such is the allegorical quality. There are 24 types of allegories explained in "Dandiyalankaram". From the period of Sangam to modern literature, we can see many allegories spread like sand on the beach in Tamil literature. Some authors are known for their extensive and specialized use of allegories in their works. In this case, the poets have dealt with allegories more in the songs starting from "Natrinai" to "Purananuru" in the "Ettuthogai" books. In this chapter, the similes revealed in the "Agananuru" hymns have been examined in detail. In such an analysis, more parables have been recorded in the songs related to Palaitthinai for the sake of the leader (Thalaivan) who is working hard for the sake of materialization. In particular, this chapter shows that more than ten types of allegories have been revealed in "Aganaooru".

Keywords: *Aganaooru*, Allegory, Quality.

References

[1] Dr. S. V. Subramanian. *Tolkappiyam Thelivurai*. Manivaskar Library, Chennai - 600108, 2003.

[2] Subramaniam, S.V. *Agananooru Mulamum Uraium*. Manivasakar Pathipagam, Chennai.
[3] Dr. S. V. Subramanian. *Tolkappiyam Thelivurai*. Manivaskar Library, Chennai - 600108, 2003.
[4] Thirujnanasambandhar. *Tandiyalankaram*. Kathir Pathippagam, Thiruvaiyaru.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 ISBN Number: 978-81-977288-6-0

அகநானூற்றில் உவமை நயம்

முனைவர் இர. சாம்ராஜா, உதவிப்பேராசிரியர், அரசியல் அறிவியல் துறை, பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், வல்லம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0006-3744-6913
DOI: 10.5281/zenodo.13726702

ஆய்வுச்சுருக்கம்

தமிழின் ஐந்திலக்கணங்களுள் ஒன்று அணி இலக்கணமாகும். இந்த அணி வகையில் ஒன்று உவமை அணியாகும். தண்டியலங்காரத்தில் 24 வகையான உவமைகள் விளக்கப்படுகின்றன. சங்ககாலம் தொட்டு இக்கால இலக்கியம் வரை தமிழ் இலக்கியத்தில் கடற்கரை மணலைப் போல உவமைகள் விரவிக் கிடப்பதைக் காணலாம். உவமைகளை அதிகமாகவும் சிறப்புறவும் கையாண்டதால் பெயர் பெற்ற படைப்பாளர்களும் உண்டு. இந்நிலையில் எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை தொடங்கி புறநானூறு வரையான பாடல்களில் புலவர்கள் உவமைகளை அதிகமாகவே கையாண்டுள்ளனர். இங்கு அகநானூற்றுப் பாடல்களில் வெளிப்பட்டுள்ள உவமைகள் மட்டும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. அவ்வாறு ஆராய்ந்ததில் பொருளீட்டுதலின் பொருட்டு

 ISBN Number: 978-81-977288-6-0

பிரிந்து சென்ற தலைவனை நினைத்து வாடியிருக்கும் தலைவியின் பொருட்டான பாலைத் திணை சார்ந்த பாடல்களில் உவமைகள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பத்திற்கும் மேற்பட்டுள்ள உவமை வகைகள் அகநானூற்றில் வெளிப்படுத்தப் பட்டுள்ளதை இந்த ஆய்வுக் கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

கலைச்சொற்கள்: சங்க இலக்கியம், அகநானூறு, உவமை.

முன்னுரை

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்று அகநானூறு. அகம் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆனது. இந்நூலிலுள்ள பாடல்களை 145 பேர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் உருத்திர சன்மனார் என்பவராவார். இந்நூலைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி எனும் மன்னனாவான். இந்நூலின் கடவுள் வாழ்த்தினைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். 13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும் கொண்டுள்ள இந்நூலில் வெளிப்பட்டுள்ள உவமைகள் ஆராயப்படுகின்றன.

உவமை - பொருள்

உவமைக்கு அகராதியில் பொருள் காணும்போது,

ISBN Number: 978-81-977288-6-0

இகல், இடை, இணை, ஈடு, உவமம், உறழ்வு, எதிர், ஒப்பு, கட்டளை, சங்காசம், சதிரிசம், சாம், சமானம், சன்னியம், சாயல், துணை, துல்லியம், நிகர், நிகாசம், நிபம், நேர், புரை, பொருவு, பொருவுதல், போல், மலை, மானம், மான். (நா. கதிரைவேற்பிள்ளை, 2016: 1399)

ஆகிய பொருள்களைப் பெற முடிகிறது. பெரும்பாலும், ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையேயுள்ள ஒப்புமையை எடுத்துக்கூறுவது உவமைக்குப் பொருளாகிறது.

தொல்காப்பியரின் பார்வையில் உவமை

தொல்காப்பியர் ஏய்க்கும் என்பது மெய் உவம உருபு என்கிறார். மேலும், 'கடுக்கும்' என்பது மெய் உவமை என்கிறார். அகநானூற்றில் ஒரு பாடல் மட்டும் பாடிய ஒக்கூர் மாசாத்தியார் முல்லைத் திணைப் பாடலில், பாங்கன் கூற்றாக ஒரு பாடலைப் பாடியுள்ளார். அப்பாடலில் கடுக்கும் என்பதை உவமைச் சொல்லாகப் பயன்படுத்தியுள்ளார். அதாவது,

கார்மழை முழக்கு இசை கடுக்கும்
முனைநல் ஊரன், புனைநெடுந் தேரே.

(அகம்-14:20-21)

என்று பாடியுள்ளார். அதாவது, கார்கால மழையின் இடி ஓசை போலச் சக்கரங்கள் கற்களில் மோதி விரைந்து

 ISBN Number: 978-81-977288-6-0

குதிரையால் இழுத்துவரும் தலைவன் தேரினைக் கண்டேன் என்று கூறுகிறான். குறிப்பாக, கார் காலத்து மழை முழவின் இசையை நிகர்க்கும் என்பது இத்தொடர் உணர்த்தும் கருத்தாகும்.

உவமைப் பொருளைத் தரும் வினையெச்ச இடைச் சொல்லான போல என்பதைத் தொல்காப்பியர், உருவினை உணர்த்துகின்ற உவம உருபு என்கிறார். **ஒளித்தியங்கு மரபின் மறப்புலி போல (அகம்., 22:15)** இதில் தலைவனின் செயல் புலியின் செயலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. மேலும், தொல்காப்பியர் உவமையைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டுகிறார்.

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்.

(தொல்., சூ. 272)

‘புலி போலப் பாய்ந்தான்’ என்பது வினை; ’மாரியன்ன வண்கை’ என்பது பயன்; துடி போலும் இடை என்பது வடிவு; தளிர் போலும் மேனி என்பது நிறம். இந்த எடுத்துக்காட்டுகளால் நால்வகை உவமைகள் விளக்கப்படுகின்றன. (தொல்., சூ. 272).

மேலும், உவமை என்பது நால்வகைச் சிறப்புகளால் அமைகின்றது என்கிறார் தொல்காப்பியர்.

ISBN Number: 978-81-977288-6-0

சிறப்பே நலனே காதல் வலியோடு

அந்நூற் பண்பும் நிலைக்களம் என்ப.

(தொல்., சூ. 275)

உவமை குறித்து தண்டியலங்காரம் பின்வருமாறு விளக்கம் தருகிறது.

பண்பும் தொழில்லும் பயனும் என்று

இவற்றின்

ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து

ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை.

(தண்டி., நூ. 30)

இதில் உவமையைப் பண்பு உவமை, தொழில் உவமை, பயன் உவமை என மூன்றாகப் பாகுபடுத்தி தண்டியலங்காரம் கூறுகிறது. ஒரு பொருளின் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகிய பண்புகளின் காரணமாக அமையும் உவமை பண்புவமை எனப்படும். ஒரு தொழில் காரணமாக அமையும் உவமை தொழில் உவமை எனப்படும். ஒரு பொருளினால் கிடைக்கும் பயன் காரணமாக அமையும் உவமை பயன் உவமை எனப்படும்.

உவமை வகைகள்

தண்டியலங்காரம் (நூ. 31) மொத்த உவமைகளாக இருபத்து நான்கு வகைகளைக் குறிப்பிடுகிறது. 1. விரி உவமை 2. தொகை உவமை 3. இதர விதர உவமை 4. சமுச்சய உவமை 5. உண்மை உவமை 6. மறுபொருள்

ISBN Number: 978-81-977288-6-0

உவமை 7. புகழ் உவமை 8. நிந்தை உவமை 9. நியம உவமை 10. அநியம உவமை 11. ஐய உவமை 12. தெரிதரு தேற்ற உவமை 13. இன்சொல் உவமை 14. விபரீத உவமை 15. இயம்புதல் வேட்கை உவமை 16. பலபொருள் உவமை 17. விகார உவமை 18. மோக உவமை 19. அபூத உவமை 20. பலவயிற்போலி உவமை 21. ஒருவயிற்போலி உவமை 22. கூடா உவமை 23. பொதுநீங்கு உவமை 24. மாலை உவமை போன்ற பிற உவமைகளிலும் அகநானூற்றுப் பாடல்களில் புலவர்கள் கையாண்டுள்ளதை இனிக் காணலாம்.

நன்னூல் 366ஆம் சூத்திரம் உவம உருபுகளாக, போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைப, ஏய்ப்ப, நேர், நிகர், அன்ன, இன்ன போன்றை பனிரெண்டினைக் கூறுகிறது. இவை போன்ற உவம உருபுகளை அவற்றின் பொருள் அமைப்பிற்கு இணையாக அட்டவணைப்படுத்தி, அவ்வுருபுகள் கொண்ட அகநானூறுப் பாடல்களில் சில உதாரணங்களைக் காணலாம்.

உவம உருபு	பொருள் அமைப்பு
அன்ன, போல, புரைய, நேர், மான, ஒப்ப “இரும்பு வடித்தன்ன கருங்கை” (அகம்.172:)	நிகர்க் கூற்று

 ISBN Number: 978-81-977288-6-0

“வேய்புரை பணைத்தோள்” (அகம்.47:18)	
இன், இனும்	உறழ்வு
மருள், உறழ் “எழு உறழ் திந்தோள்” (அகம்.209:4)	முரண்பாடு
வென்ற, பொருத, ஏசும், ஏய்ப்ப, கடுப்ப	வெல்லுதல் நிலை
என, என்னும், ஏர், செத்து, சால, மயங்கு, அம்ர், அவிர், ஆங்கு, ஆகியர் “மலர் ஏர் உண்கண்” (அகம்.176)	பலவகைப் பொருள்களில் வருபவை

கடவுள் வாழ்த்தில் உவமை

சங்க இலக்கிய நூல்கள் பெரும்பாலும் கடவுள் வாழ்த்தினை முதலில் கொண்டே அமைந்துள்ளன. குறிப்பாகத் திருமால், முருகன் என ஏதேனும் ஒரு கடவுளைப் புகழ்ந்து பாடப்பட்டிருக்கும். அந்நிலையில், அகநானூற்றிலுள்ள கடவுள் வாழ்த்தில் சிவனை வர்ணித்தலில் உவமைகள் வெளிப்பட்டுள்ளன.

செவ் வான் அன்ன மேனி, அவ் வான்
இலங்கு பிறை அன்ன விலங்கு வால் வை எயிற்று
எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரி சடை.

(அகம்., 8-10)

 ISBN Number: 978-81-977288-6-0

அதாவது, சிவபெருமான் சிவந்த வானத்தைப் போன்ற திருமேனியை உடையவன். அந்த வானத்தில் விளங்கும் பிறைச் சந்திரனைப் போன்று வளைந்த வெண்மையான கூரிய பற்களை உடையவன். தீயானது கொழுந்துவிட்டு எரிவதைப் போன்று விரிந்து விளங்குகின்ற முறுக்கேறிய சடையை உடையவன் என்று வர்ணிக்கப்படுகிறார்.

விபரீத உவமை

பொருளாக வருவதை உவமையாக்கியும், உவமையாக வருவதைப் பொருளாக்கியும், அதாவது, உவமையும் பொருளும் இடம் மாற்றுவதால் உண்டாவது விபரீத உவமையாகும். அகநானூற்றில், 'நெய்தல் உண்கண்' (10:5), கண்போல் நெய்தல்' (170:4) என விபரீத உவமை இடம்பெற்றுள்ளது. பொதுவாக கண்களுக்கு நெய்தற் பூவினை உவமையாக்குவது தான் மரபு. இது பொதுநியதி. இங்கு நெய்தல் மலர் கண்களைப் போல மலர்கிறது என்று கூறுவது சிறப்பு நியதி எனலாம்.

கருத்து விளக்க உவமை

இலக்கியத்தில் கவிஞர்கள் பொருளுக்கு அழகு சேர்ப்பதற்கு அன்றி தாம் சொல்ல வந்த கருத்தை விளக்குவதற்கு உவமைகளைக் கையாளுவர். இதனைக் கருத்து விளக்க உவமை என்று கூறுவர். அகநானூற்றில் பரணர் முப்பதிற்கும் மேற்பட்ட பாடல்களைப்

 ISBN Number: 978-81-977288-6-0

பாடியுள்ளார். அதில் மருதத்திணைப் பாடலில் இத்தகு உவமை வெளிப்பட்டுள்ளது.

இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன்
பொருள்போல்
பரந்து வெளிப்படா தாகி
வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே. (276:13-15)

இப்பாடலில் தலைவியின் அழகு தலைவனுக்குப் பயன்படாமல் வீணாகிறது. குறிப்பாக, அவளின் அழகு வெளிப்படாமலேயே இருக்கிறது. இதனை விளக்கிட, வறியவர்களுக்கு ஒன்று ஈயாதவனுடைய செல்வம் வெளிப்படாததை உவமையாகக் குறிப்பிட்டு விளக்கப்பட்டுள்ளது.

உள்ளுறை உவமை

புலவன் தான் சொல்ல வந்த கருத்தினை மறைமுகமாகச் சொல்வது உள்ளுறை உவமையாகும். அகநானூற்றில் குறிஞ்சித் திணையில் தலைவி கூற்றாகப் பின்வரும் அஞ்சிலாந்தை மகணாகையாரின் பாடல் இடம்பெற்றுள்ளது.

முடவுமுதிர் பலவின் குடம்மருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
முழவன் போல அகப்படத் தழீஇ
இந்துணைப் பயிரும் குன்ற நாடன். (352:-7)

ISBN Number: 978-81-977288-6-0

இதில், குரங்குகளுக்குத் தலைமை ஏற்றிருக்கும் ஆண் குரங்கு, பலாப்பழம் ஒன்றைத் தன் உடலுடன் சேர்த்து எடுத்துச் சென்று தன்னுடைய பெண் குரங்கினை அழைக்கும். இது தலைவன் தலைவியை அவ்வாறு காத்திடுவான் என்ற மறை பொருளைத் தருகிறது.

பாலைத் திணையில் தலைவன் கூற்றில், யானையொன்று கிடைத்த சிறிதளவு நீரில் தன் பெண் யானையைக் குளிக்க வைத்து, சேற்று நீரில் தாம் குளித்தது. இதுபோலத் தலைவன் தலைவியைக் காத்திடுவான் என்கிறது. அகநானூற்றில் இருபதிற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடிய மதுரை மருதனிளநாகனின் பின்வரும் பாடல்,

தொடுகுழி மருங்கில் துவ்வாக் கலங்கல்
கன்னுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறு கொண்டாடிய வேறுபட்டு வயக்களிறு.(121)

குமிழி என்னும் ஊரில் பிறந்த குமிழிஞாழார் நப்பசலையார் எனும் புலவர் அகநானூற்றில் ஒரேயொரு பாடலை மட்டும் பாடியுள்ளார். இப்பாடல் நெய்தல் திணையில் தோழி கூற்றில், ஆமை ஒன்று மறைவிடத்தில் முட்டை இட்டதும், குஞ்சு பொறிக்கும் வரை ஆண் ஆமை காக்கின்றது. இதில், உள்ளுறையாக, தலைவன் களவொழுக்கத்தைத் திருமணம் வரை யார்க்கும் தெரியாமல் காத்திடுவான் என்பதைக் கூறுகிறது.

ISBN Number: 978-81-977288-6-0

ஐய உவமை

பொருளுக்கும் உவமைக்கும் ஐயம் உண்டாக்கப்படுவது ஐய உவமையாகும். அகநானூற்றில் தலைவன் கூற்றில் உள்ள பரணரின் மருதத்திணைப் பாடல் ஐய உவமை கொண்டு அமைந்துள்ளது.

ஆன்ற கற்பின் சான்ற பெரிய
அம்மா அரிவையோ அல்லள்
ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெரிய உருகெழு கவாஅன்
நேர்மலர் சுனை உறையும்
சூர்மகள் மாதோ என்னும் என் நெஞ்சு. (196:12-17)

அதாவது, கற்பு சான்ற தலைவி உருவத்தால் பெண் எனச் சொல்வதற்கு இல்லை. அவள் ஆய் நாட்டு மலைச் சாரலில் உறையும் தெய்வ மகளோ என்று என் நெஞ்சம் கருதுகிறது என்று தலைவன் கூறுகின்றான். இவ்வாறு தலைவனின் நிலையில் ஐய உவமை வெளிப்பட்டுள்ளது.

திரிபு உவமை அல்லது விகார உவமை

உவமையைத் திரித்து பொருளுக்கு ஏற்றவாறு அமைக்கும் உவமை திரிபு உவமையாகும். இதனைத் தண்டியலங்காரம் விகார உவமை என்கிறது. அதாவது, ஓர் உவமையை விகாரப்படுத்தி உவமிப்பது என்கிறது. அகநானூற்றில் ஒரு பாடல் மட்டும் பாடிய குறுங்குடி மருதனார் முல்லைத் திணைப் பாடலில் தோழி

ISBN Number: 978-81-977288-6-0

தலைவியிடம் கூறுவதாகத் திரிபு உவமை அமைந்த நிலையில் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.

நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவி ழலரி னாறு
மாய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே.

(அகம்., 4: 15-17)

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் பாடிய மருதத் திணைப் பாடலில், **இரும்புஇயன் றன்ன கருங்கோட்டு எருமை (அகம்., 56:3)** என்று பாடியுள்ளார். அதாவது, இரும்பால் ஆனது போன்று கரிய கொம்புகளையுடைய எருமை இனம் என்று இரும்புக்குக் கொம்பு உவமைப்படுத்தப்பட்டுள்ளது.

உவமையில் பிறழ்வுபட உணர்தலாகக் கூறல்

கபிலர் குறிஞ்சித் திணைப் பாடலில்,

வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழ
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரும்.

(அகம்., 12:10-12)

அதாவது, யானை வேங்கை மரத்தைப் புலி எனப் பிறழ உணர்ந்து அதனைத் தாக்குகிறது என உவமைப் பட கூறியுள்ளார்.

ஈழத்துப் பூதன்றேவனார் குறிஞ்சித் திணைப் பாடலில்,

ISBN Number: 978-81-977288-6-0

திரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுண்மலி பிழிதருங் காமர் கடாஅ
மிருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்
திருங்கல் விடரளை யசுண மோர்க்கும்.

(அகம்., 88:9-12)

இதில் வண்டின் ஒலி யாழிசையாகப் பிறழ உணரப்படுகிறது.

வடிவு பற்றிப் பிறழ உணர்ந்த செய்தி

காவன் முல்லைப் பூதனாரின் பாலைத் திணைப் பாடலில், ஊறாது கைவிடப்பட்ட கிணறு யானையின் படுகுழியாகப் பிறழ உணரப்படுகிறது.

வல்வாய் கணிச்சிக் கூழார் கூவல
ரூறா திட்ட வுவலைக் கூவல்
வெண்கோடு நயந்த வன்பில் கானவ
ரிகழ்ந்தியங் கியவி னகழ்ந்த குழிசெத்
திருங்களிற் றினநிரை தூர்க்கும்
பெருங்க லத்தம் விலங்கிய காடே (அகம்., 21)

இதன் பொருளாவது, வலிமையான வாயினைக் கொண்ட குந்தாலியை உடைய கூழினை உண்ணும் கிணறு வெட்டுவோர், நீர் ஊறாததால் விட்டுச் சென்ற சருகுகளால் மூடப்பெற்ற கிணற்றினை, பெரிய களிற்றியானைக் கூட்டமானது தமது வெண்மையான தந்தங்களை விரும்பிய அன்பில்லாத கானவர்கள், இனித்

 ISBN Number: 978-81-977288-6-0

தீங்கில்லை என்று கருதிச் செல்லும் வழிகளில் தங்களைப் பிடிப்பதற்காக உருவாக்கி அகழ்ந்து மறைத்துவைத்த குழிகளாகக் கருதி அவற்றைத் தூர்க்கின்ற பெரிய பாறைகள் நிறைந்த வழிகளைக் கொண்ட காடு என்பதாகும்.

மதுரை மருதனிளநாகனின் பாலைத் திணைப் பாடலில், கோடைப் பெருங்காற்று மந்தியின் குரலாகப் பிறழ உணரப்படுகிறது. அப்பாடலாவது,

வாறுசென் மாக்கள் சோறுபொதி வெண்குடைக்
கன்மிசைக் கடுவளி யெடுத்தலிற் றுணைசெத்து
வெருளேறு பயிறு மாங்கட்
கருமுக முசுவின் கானத் தானே. (அகம்.,121:13-15)

கல்லாடனாரின் பாலைத் திணைப் பாடலில்,

வரைசேர் மராஅத் தூழ்மலர் பெயல்செத்
துயங்கல் யானை நீர்நசைக் கலமரச்.
(அகம்., 199:2-3)

என்று உதிரும் மரா அம் பூ மழையாகப் பிறழ உணரப்படும் நிலையில் பாடியுள்ளார். காவன்முல்லைப் பூதனார் பாலைத் திணைப் பாடலில், கானல் நீரை மழையாகப் பிறழ உணரப்படுமாறு பின்வரும் பாடலில் பாடியுள்ளார்.

பேஎய் வெண்டேர்ப் பெயல்செத் தோடித்
தாஅம் பட்ட தனிமுதிர் பெருங்கலை

 ISBN Number: 978-81-977288-6-0

புலம்பெயர்ந் துறைதல் செல்லா தலங்குதலை.

(அகம்., 241:9-11)

ஓமை, நொச்சி இவற்றின் வெட்டுப்பட்ட இடங்களும் காந்தள் முகையும் குருதி படிந்த ஊனாகப் பிறழ்ந்து உணரப்படுகிறது.

உவமையில் கலை

மாமூலனார் பாலைத் திணைப் பாடலில், **எழுதியன்ன திண்நிலைக் கதவம் (அகம்., 311:3)** என்று பாடியுள்ளார். இதன் பொருளாவது, சிற்பம் போன்ற அழகுடன் திகழும் நிலையினைக் கொண்ட கதவு என வீட்டை கலைநயத்துடன் உவமிக்கிறார்.

முல்லைத் திணைப் பாடலில், மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார், **ஓவத்தன்ன கோபச் செந்நிலம் (அகம்., 54:4)** என்கிறார். அதாவது, ஓவியம் போன்று இருக்கின்ற இந்திர கோபப் பூச்சிகள் நிறைந்திருக்கின்ற சிவந்த நிலம் என்கிறார். இதில் பூச்சிகள் பரந்து திரிந்ததைக் கலைநயத்துடன் ஒப்பிட்டுள்ளார். வெறி பாடிய காமக் கண்ணியார் குறிஞ்சிப் பாடலில், வெறியாடும் வேலன் ஒருவன் ஆட்டம் ஆடும் பாவை போல, முருகன் ஏறி நின்று ஆடுவதாகக் கூறுகிறார். அப்பாடலாவது,

ஓவத்து அன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன பலராய் மாண்கவின்.

 ISBN Number: 978-81-977288-6-0

(அகம்., 98:11-12)

இதன் பொருளாவது, ஓவியம் போன்று தொழிலால் நன்கு புனையப்பட்ட நல்ல இல்லத்தில் பாவையைப் போன்று பலராலும் ஆராயத்தக்க மாட்சிமைப்பட்ட அழகு என்பதாகும். உவமையின் வழி புலவருக்கு இருந்த யாழிசை பற்றிய அறிவும் வெளிப்பட்டுள்ளது.

… நல்யாழ்

நரம்பு இசைத்தன்ன இந்தீம் கிளவி.(அகம்., 109)

அதாவது, சிறந்த யாழின் நரம்பு இசைப்பது போன்று மிக இனிமையான மொழி உடைய தலைவி இருக்கும் ஊர் என்பதாகும்.

முல்லைத் திணையில் தலைவன் தேர்ப்பாகனுக்குச் சொல்லியதாகப் பின்வரும் உவமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

படுமழை பொழிந்த பயம்மிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்க.

(அகம்., 154:1-3)

இப்பாடலின் பொருளாவது, முல்லை நிலத்தில் மிகுதியாக மழை பொழிந்து பள்ளங்கள் எல்லாம் நீர்நிறைய அதில் வாழ்கின்ற தவளைகள் மகிழ்ந்து வாத்தியங்கள் போல் ஒலிக்கும் என்று தவளைகளின் சத்தம் வாத்தியங்களின் ஒலியுடன் உவமிக்கப்பட்டுள்ளது.

 ISBN Number: 978-81-977288-6-0

தலைவனிடம் தோழி பேசுவதாக அமைந்த மருத நிலப் பாடலின் தொடக்கத்தில், அவளது ஊரை உவமைப்பட பரணர் வர்ணிக்கிறார்.

மேல்துறைக் கொளீஇய கழாலின் கீழ்த்துறை
உகுவார் அருந்த பகுவாய் யாமை
கம்புள் இயவின் ஆக, விசிபிணித்
தெண்கண் கிணையின் பிறழும் ஊரன்.

(அகம்., 356:1-4)

இப்பாடலின் விளக்கமாவது, மேலே துறையில் கள்ளினை உண்டபின் கலங்களைக் கழுவுவதால் அக்கள்ளின் கலங்கள் கீழ்த் துறையில் ஓடி வருகின்ற நீரில் வரும். அதனை ஆமை குடித்து சம்பங்கோழி வாத்தியக்காரன் போல் விளங்க இறுகக் கட்டிய கண்ணினை உடைய கிணைப் பறை போல, யாமை தோற்றமளிக்கும். அத்தகைய ஊரை உடைய தலைவனே! என்பதாகும். இதில் தோழி இசைக் கருவிகளை உவமைப்பட வர்ணிக்கிறாள்.

ஆலங்குடி வங்கனார், பரத்தை பாங்கனிடம் பேசுவதாக மருதப் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். இதில் தண்ணுமை எனும் கருவி உவமைப்பட வெளிப்பட்டுள்ளது.

களிறுபெறு வல்சிப் பாணன் எறியும்
தண்ணுமைக் கண்ணின் அலைஇயர், தன் வயிறே

ISBN Number: 978-81-977288-6-0

(அகம்., 106:12-13)

அதாவது, பாண்டியனது வெற்றியைப் புகழ்ந்து பாடி யானைகளைப் பரிசாகப் பெறும் பாணன் அடிக்கும் மத்தளத்தின் கண் அதிர்வதைப் போலத் தலைவி அவள் வயிற்றில் அடித்துக் கொள்ள ஏதுவாகும் என்பதால் நீ என்னுடன் வருக எனப் பரத்தை பாங்கனிடம் பேசுவதில், மத்தளத்துடன் தலைவியின் வயிறை ஒப்பிட்டுப் பேசுகிறாள்.

ஒரோடோகத்து கந்தரத்தனார், தலைவி தோழியிடம் உரைப்பதான பாலைத் திணைப் பாடலில், முரசு போல் முழங்கிய மேகத்தை, **'பறைக்குரல் எழிலி' (அகம்., 23:2)** என்று உவமித்துள்ளார். மற்றொரு முல்லைத் திணைப் பாடலில் மதுரை யெழுத்தாளன் எனும் புலவர், தலைமகன் பாசறையிலிருந்து சொல்வதாகப் பாடியுள்ளார். அதில் அச்சம் தரும் வானவில்லுடன் மலை முகட்டில் தவழும் மேகம், முரசு போல் முழங்கி இடி இடித்துக் கடலில் படிந்து கடல் நீரை முகந்து எல்லாத் திசைகளும் மறையுமாறு மழையைப் பெய்தது என்று மேக முழக்கத்தினை முரசுடன் உவமித்துள்ளார்.

மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில்
பணைமுழங்கு எழில் பௌவம் வாங்கி

(அகம்., 84:1-2)

 ISBN Number: 978-81-977288-6-0

செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார் எனும் புலவர், தலைவியிடம் தோழி கூறுவதாக அமைந்த பாலைத் திணைப் பாடலில், ஊதுகொம்பு எனும் இசைக்கருவியை உவமைப்பட வர்ணிக்கிறார்.

கான மஞ்ஞைக் கமஞ்சூல் மாப்பெடை
அயிர்யாற்று அடைகரை வயிரின் நரலும்.

(அகம்., 177:10-11)

அதாவது, நிறைந்த கர்பத்தோடு உள்ள பெண் மயில் நீர் கிடைக்காமல் அயிரி எனும் ஆற்றங்கரையில் ஊதப்படும் கொம்பு போலக் கூவும் என்று பெண் மயிலின் அகவலை ஊதப்படும் கொம்பின் ஒலியுடன் உவமித்துள்ளார். தோழியிடம் தலைவி கூறுவதாக அமைந்த கபிலரின் குறிஞ்சிப் பாடலில், காட்டில் ஆடும் மயிலின் நடனத்தினை களத்தில் ஆடும் விறலியின் நடனத்துடன் ஒப்பிட்டுள்ளார்.

கழைவளர் அடுக்கத்து இயலிஆ டும்மயிலே
நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்

(அகம்., 82: 9-10)

வெள்ளிவீதியாரின் தோழியிடம் தலைவன் கூறும் பாலைத் திணைப் பாடலில், பறை இசைக் கருவி உவமையுடன் விளக்கப்பட்டுள்ளது.

வாடல் உழுஞ்சில் விளைநெற்று அம்துணர்
ஆடுகளப் பறையின் அரிப்பன ஒலிப்ப

ISBN Number: 978-81-977288-6-0

(அகம்., 45: 1-2)

அதாவது, தலைவன் செல்லும் வழி பற்றி தோழி கூறும்போது, நம் தலைவர் நம்மைப் பிரிந்து, வற்றிய வாகை மரத்தின் முற்றிய காய் நெற்றுகள் கூத்தரின் பறை போல விட்டு விட்டு ஒலிக்க என்று வாகைக் காய்களின் சத்தம் பறையுடன் உவமிக்கப்பட்டுள்ளது.

தொகுப்புரை

சங்க இலக்கியத்தில் அகம் சார்ந்த பாடல்களில் புலவர்கள் பெரும்பாலும் உவமைகளைக் கையாண்டுள்ளனர். குறிப்பாக, அகநானூற்றில் பாலைத் திணைப் பாடல்களில் மிகுதியாக தலைவியை வர்ணித்தலின் பொருட்டு புலவர்கள் உவமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். அகநானூற்றுப் பாடல்களில் சிற்பம், ஓவியம் போன்ற கலைகள் குறித்தும், யாழ், தண்ணுமை, ஊதுகொம்பு, பறை போன்ற இசைக் கருவிகள் குறித்தும் புலவர்கள் தம் பாடல்களில் உவமைகளாகப் புலப்படுத்தியுள்ளனர். அகநானூற்றுப் பாடல்களில் பெரும்பாலும் ஆண்பாற் புலவர்களின் பாடல்களிலேயே உவமைகள் மிகுதியாக வர்ணிக்கப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது.

ISBN Number: 978-81-977288-6-0

துணைநூற்பட்டியல்

[1] சுப்பிரமணியம், ச.வே. *அகநானூறு மூலமும் உரையும்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[2] திருஞானசம்பந்தர். *தண்டியலங்காரம்.* கதிர் பதிப்பகம், திருவையாறு.

[3] முனைவர் ச.வே.சுப்பிரமணியன். *தொல்காப்பியம் தெளிவுரை.* மணிவாசகர் நூலகம், சென்னை - 600108, 2003.

[4] பரமசிவன்.மா, அகநானூறு – களிற்றியானை நிரை, தொகுதி-1, (2024), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

ISBN Number: 978-81-977288-6-0

Social News in Agananooru

Dr. S. Sagilabanu, Assistant Professor of Tamil, St Joseph's College, Trichy- 02, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0008-2430-1840
DOI: 10.5281/zenodo.13726948

Abstract

In ancient times, humans lived in harmony with nature. People who expressed their ideas in sound and symbolism developed spoken language. Culture provides human beings with the necessary knowledge and skills to fulfill their basic needs. The best of the individual ideas becomes culture. The cultural status of a country depends on the men and women who live in that country. Each element of character is understood to be essential to human life. In the songs of Neithal Thinai of "Agananooru" clearly portrays the lifestyle of the people of the land and their characteristics and customs. This chapter aims to know about the lifestyle of the people of Neithal land as found in "Agananooru".

Keywords: Social, News, *Agananooru*.

References

[1] B. Ve. Somasundaran (Urai). *Agananooru*. Kazhaga Veliyeedu, Edition-1970.
[2] A. Dakshinamurthy. *Sanga Ilakiyangal Unarthum Mantha Unarvugal*. Mangayarkarasi Publishing House, Edition-2001.

[3] Dr. P. Gomati et al. *Sanga Ilakiyathil Manuda Vizhumiyangal*. A. E. Publishing House, Edition-2011.
[4] Dr. S. N. Kandasamy. *Ilakiyach Solaiyile*. Veera Cholan Publishing House, Thanjavur.
[5] Dr. K. V. Balasubramanian. *Sanga Ilakiyathil Puraporul*. Meera Publishing House Pudukottai.
[6] Vidhwan, S. Arumuga Muthaliyar. *Igananoothruch Sorpolivugal*. (Mullaithinai) Saiva Siddhanta Nupadipupu Kazhagam, Chennai.
[7] Dr. S. Anitha Sophia Margaret. *Akananoortil Mullai Thinai*. Ilandamil Publishing House, Coimbatore.
[8] Dr. A. Rajalakshmi, *Sangha Ilakiya Aaivugal*. Nuleni Publishing House, Chennai.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

ISBN Number: 978-81-977288-6-0

அகநானூற்றில் காணப்படும் சமுதாயச் செய்திகள்

முனைவர் சி. ஷகிலாபானு, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சி-02, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0008-2430-1840
DOI: 10.5281/zenodo.13726948

ஆய்வுச் சுருக்கம்

ஆதிகாலத்தில் மனிதர்கள் இயற்கையுடன் இயைந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். ஒலியளவிலும் குறியீட்டு அளவிலும் தம் கருத்தை வெளியிட்டு வந்த மக்கள் பேச்சு மொழியை உருவாக்கிக் கொண்டனர். மனிதர்கள் தம் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உரிய அறிவையும் திறமையையும் பண்பாடு அளிக்கிறது. தனிமனிதனின் சிறந்த செயல்களே பண்பாடாக மாறுகின்றன. ஒரு நாட்டின் பண்பாட்டு நிலைக்களன் அந்நாட்டில் வாழும் ஆடவர், பெண்டீரைச் சார்ந்துள்ளது. பண்பின் ஒவ்வொரு கூறும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தன்மை உடையதாக விளங்குகிறது. அகநானூற்றில் நெய்தல் திணைப் பாடல்களில் நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறையினை அவர்களது குணநலன்களையும், பழக்க வழக்கங்களையும் தெளிவாக படம் பிடித்துக்

காட்டுகின்றது. நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறைக் குறித்து அறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

முக்கிய வார்த்தைகள்: *சமூகம்*, செய்திகள், *அகநானூறு.*

முன்னுரை

அகநானூற்றில் நெய்தல் திணைப் பாடல்களில் நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறையினை அவர்களது குணநலன்களையும், பழக்க வழக்கங்களையும் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றது. நெய்தல் நிலத்தில் உள்ள ஊர்கள் சிறு நல்லூரரளவும், பாக்கமெனவும் பட்டினமெனவும் கூறப்படும். நெய்தல் நில தலைவன் சேர்ப்பன், புலம்பன், துறைவன் என அழைக்கப்படுவான். நெய்தல் நில மக்கள் பொதுவாக நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தையர் எனப் பெயர் பெறுவர். பரதவர் வாழ்க்கை முறைப் பற்றி கீழே விரிவாகக் காண்போம்.

பரதவர் தொழில்

பரதவ மக்கள் கடலில் மீன் பிடித்தலையே தலையாய தொழிலாக கொண்டவர்கள். கழிகளிலும் மீன் பிடிப்பர். உப்பு விளைவிப்பதும் அவர் தொழிலாகும். இவற்றால் வரும் பொருளைக் கொண்டே அவர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவ்வுண்மையை 'நெய்தற்கு உணா மீன் விலையும், உப்பு விலையும்'

ISBN Number: 978-81-977288-6-0

என்று நச்சினார்க்கினியரும், ‘நெய்தற்கு உணவு-உப்பு விலையும்’ மீன் விலையும்’ என்று இளம்பூரணரும், ‘நெய்தற் உணாலே’ என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உணா கூறுகையில் குறிப்பிகின்றமையால் அறிகிறோம். பரதவர் மரக்கலங்களிலும், கட்டுமரங்களிலும் வலைகள் ஏற்றிச் சென்று கடலில் வீசி மீன் பிடிப்பர். ஆழ்கடலில் சென்று மீன்பிடிப்பதும் உண்டு. தூண்டிலில் சிறிய மீன்களை இறையாக கொத்தி கடலிலும் கழியிலும் எறிந்து மீன் பிடிப்பார்கள். நள்ளிரவிலும் பரதவர் மீன் வேட்டையாடுவதில் நாட்டம் மிக உடையவர்கள். இரவில் தீ பந்தங்களை கொளுத்திக்கொண்டு தங்கள் திண்ணிய திமிலில் செல்வர்; விளக்கொளியைக் காணும் சிறு மீன்கள் திரண்டுஎழும். அவற்றைதிண்ண வெஞ்சுறாக்களும் விரைந்து வரும். அவற்றை மீனவர் பிடிப்பர் என்ற செய்திகள் இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ளன.

உப்பு விளைத்தல் விற்றல்

கடற்கரையிலும், கழிகரையிலும் உள்ள உவர் நிலத்தில் சிறு சிறு பாத்தியமைத்து அவற்றில் கடல் நீரினையும், உப்பங்கழி நீரையும் பாய்ச்சி உப்பு விளைப்பர். சில இடங்களில் உலர் நிலத்தின் அடியிலேயே மிகுந்த உப்புச்சத்துள்ள நீரூற்றுகள் உள்ளன. அங்கெல்லாம் அந்நீரை வெளியே கொணர்ந்து

ISBN Number: 978-81-977288-6-0

பாத்திகளில் பாய்ச்சுவர். ஞாயிற்றின் வெம்மையால் நீர் வற்றி உப்பு பூத்துக்காணும். இவ்வாறு விளையும் இடங்கள் உப்பளம் என வழங்கப்பெறும். நெய்தல் நில மக்கள் உப்பு விளைவித்து அதனை பலவிடத்தும் சென்று விற்பர். உப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளவர் உமணர் என்று அழைக்கப்படுகின்றனர். பரதவ மக்களும் உப்பு விளைத்து வெளியூர்களுக்குச் சென்று விற்று வருவர்.

'பெருங்கடலில் வேட்டையாடும் மீனவர்கள் உழாது விளைத்து வெண்கடல் உப்பினை விலை கூறி விற்றுக் கொண்டே கதிரவனின் வெம்மையால் வெடித்த குன்றங்களையும் கடந்து செல்வர்; கையில் சகடத்தில் பூட்டிய கிடாக்களை விரைந்தோடத் தூண்டும் தாற்றுக் கோலினை ஏந்தியிருப்பர்' என்று அகநானூறு கூறுகின்றது.

மகளிர் உப்பு விற்றல்

'உமணரின் இளமகளொருத்தி உப்பு விற்கப் புறப்பட்டாள். ஒரு வீதியின் மருங்கே தன் கையிலுள்ள வளையல்கள் 'கல கல' வென்று ஒலிக்க வீசி நடந்தாள்; 'நெல்லிற்கு நிகரானது கல்லுப்பு' என்று மென் குரலில் விலை கூறிச் சென்றாள். அப்புதிய குரலைக் கேட்டு அயல் மனையிலிருந்த நாயொன்று குரைத்தோடி வந்தது. அவளது மதர்த்த விழிகள் மருட்சி கொண்டன' என்று அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

 ISBN Number: 978-81-977288-6-0

மகளிர் மீன் விற்றல்

மீனவர்களில் கணவன் மனைவியாகிய இருவருமே உழைத்து உண்பர். கணவனையும், மக்களையும், மனையையும் போற்றிக் காப்பதோடு, தாமும் உழைத்துப் பொருள் திரட்டி வாழ்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பர் பரதவர் குடி மகளிர், இன்னும் பிடித்துவரும் மீனை மீனவப் பெண்டிர் தலைச் சுமையாகத் தூக்கிச் சென்று அங்காடியில் விற்று வருவது பெரும் வழக்கமாயுள்ளது. ‘ஓங்கியுயர்ந்தெழும் அலைகடலில், படகிற்சென்று தம் தமையன்மார் வேட்டையாடிப் பிடித்துவந்தவன் சுறா மீன்களைத் தங்கையர், விழாக்கோலங் கொள்ளும் வீதிகளில் சென்று விலைகூறி விற்று வருவர்’ என்ற செய்தியை அகநானூற்றுப் பாடல் ஒன்று உணர்த்துகின்றது.

முத்துக் குளித்தல்

பரதவர் மீன் பிடித்தலையே தலையாய தொழிலாய் கொண்டிருந்தனரேனும், முத்து சிப்பிகள் நிறைந்த கடற் பகுதிகளையொட்டி வாழ்ந்து வந்தவர்கள் முத்துக் குளிக்கும் தொழிலிலும், சங்கெடுக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர். அளவு கடந்த முத்துச் சிப்பிகளையும் சங்குகளையும் மூழ்கியெடுத்துக் கரைக்குள் கொண்டு வந்து அவற்றைப் பங்கிட்டு விற்றுச் செல்வம் கொழித்து வாழ்ந்து வந்தனர்.

ISBN Number: 978-81-977288-6-0

ஆழ்கடலில் சென்று பரதவர்கள் வலம்புரிச் சங்கெடுக்க மூழ்குங்கால் கடலில் தீமை பயக்கும் கொடுஞ் சுறாக்கள் உலவிக் கொண்டிருக்கும். ஆதலால் கடலில் மூழ்கி அஞ்சுவர், மந்திர சக்தியால் சுறாக்களின் இயக்கத்தைத் தடைப்படுத்திவிடும் ஆற்றல் பெற்ற மீனவர்களும் இருந்தனர். அவர்கள் அந்த அச்சந்தரும் கொடுஞ் சுறாக்களை அணுகவொட்டாமல் மந்திரத்தால் தடுத்து விடுவார்கள். அதனை 'மந்திரத்தால் கட்டி விடுதல்' என்பர். அவ்வாறு கட்டி விட்ட பின்னர் அச்சமின்றி ஆழ்கடலில் முழ்கி வலம்புரிகளையும், பிற முத்துச் சிப்பிகளையும் வாரிக் கொண்டு வருவர்" என்ற செய்தியையும் அகநானூறு கூறுகிறது.

மீனவர் மணமுறை

மணமுறை பற்றிய சில அரிய செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. பழந்தமிழ் மரபுப்படி, தலைவனும், தலைவியும் கொடுப்பாகும். அடுப்பாருமின்றித் தாங்களே சந்தித்துக் களவிலே பழகிப் பின்னர் மணந்து கணவனும் மனைவியுமாய் இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவது இயல்பு. பரதவர் மரவில் ஆண்மகன் தான் விரும்பும் கன்னியை மணக்க வேண்டுமென்றால் அதற்கு பரிசாகப் பொன்னும், திரண்ட பொருளும் அளவற்ற அணிகலன்களும் கொடுக்கும்

ISBN Number: 978-81-977288-6-0

வழக்கம் உண்டென்பது சங்க இலக்கியங்களிலிருந்து அறிகின்றோம்.

பரதவ ஆடவன் ஒருவன் தான் விரும்பும் மங்கை ஒருத்தியை மணக்க நினைக்கிறான். பொன்னும் பொருளும் அருங்கலம் பலவும் எவ்வளவு அளித்தாலும் அவள் தந்தை தனக்கு அவளை மணமுடிக்க ஒப்புக்கொள்ளமாட்டார் என்பதை உணர்கின்றான். எப்படியாவது அவளை மணந்துகொள்ள வேண்டும்; அதற்காக அவன் எது வேண்டுமாயினும் செய்ய ஆயத்தமாயுள்ளான்.

நமது ஊரைத் துறந்து அவளையடைந்துவிட வேண்டியதுதான்; அவளை சார்ந்து பெரிய கடற்கரையின் கண்ணுள்ள அவனது உப்பளத்திற்குச் சென்று அங்கு உழைத்தும், அவனது உப்புப் பொதியுடன் திரிந்து வருந்தியும், பெரிய ஆழ்கடலின்கண் அவனுக்காகக் கட்டுமரத்தில் சென்று மீன் வேட்டையாடி உழைத்தும், அவன் வயமாகித் தாழ்ந்தும், பணிந்தும், சூழ்ந்து தொண்டாற்றியும் வந்தால் அறநெறியினை உணர்ந்து மனங்கனிந்து அப்பொழுதாவது தன் மகளை எனக்குத் தரமாட்டானா? தருவான் இது உறுதி; என முடிவு செய்கிறான்; அவ்வாறே செய்து இறுதியில் அவளையே மனைவியாகப் பெற்று மனையறம் புரிந்து மகிழ்ந்து வருகிறான் என்ற கருத்தை குறிப்பிடுகின்றது.

ISBN Number: 978-81-977288-6-0

ஊர்க்காவல்

யாமத்தே காவலர்கள் ஊரைக் காத்து எச்சரிக்கும் முறையும் பரதவர் சமுதாயத்தில் இருந்து வந்துள்ளது. “இரவு வேளையில் காவலர்கள் யாமந்தோறும் ஊரைச்சுற்றி காவல் காத்து வந்தனர். ஒவ்வொரு யாமத்தும் அக்காவலர்கள் ஒலிமிக்க பெரு மணி அடித்து, ஓசை எழுப்பி ‘கதவுகளை நன்க தாழிட்டுக் காத்துக் கொள்வீர்களாக!’ என மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து காவல் புரிந்தனர்” என்ற செய்தி அந்நாளில் காவலர்கள் யாமந்தோறும் மணியடித்து உணர்த்தி, விழிப்புறச்செய்து காவல் புரியும் சிறந்த பழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது என்பதை இனிதெடுத்து இயம்புகிறது.

இறை வழிபாடு

பரதவர்களின் தெய்வம் வருணன் என்பதை, ‘வருணன் மேய பெருமணல் உலகம்’ என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் அடி கூறுகிறது. பரதவர் வழிபடும் கோயில்கள் மிகப் பழமையானவை. கன்னியம்மன், முத்தாலம்மன், மாரியம்மன், படை வேட்டைம்மன், எல்லையம்மன் என்ற பெயர்களால் இத்தேவதைகளை அழைக்கிறார்கள். பரதவர்கள் பெரும்பாலும் நெற்றில் திருநீறு அணிகிறார்கள். வலையினை இழுக்கும் போதும், கட்டுமரங்களையும், படகுகளையும் தண்டுகள் (துடுப்புகள்) பூட்டி வலிக்கும்

 ISBN Number: 978-81-977288-6-0

போதும், பரதவர்கள் பாடுவார். அது அம்பாப் பாட்டு என்று கூறப்படுகிறது. 'அம்' என்றால் நீர். நீரில் (கடலில்) பாடுகின்ற பாட்டு என்ற பொருளில் 'அம்பா' என்று வழங்கப்பட்டிக்கலாம். 'அம்பி' என்பது 'படகு', படகில் பாடும் பாட்டு ஆதலின் அம்பாப்பாட்டு என்னும் மருவியிருக்கலாம். அதைப் பாடும் போது வேலா... வேலா... ஏலோ, ஏலோ என்றோ பாடுகிறார்கள்".

கள்ளுண்டு களித்தல்

பரதவ மக்கள் மனலாயன உயர்ந்து இடியேறென ஒலித்துச் சுருண்டு வளைந்து கழற்றிப் புடைக்கும் பயங்கரப் பேரலைகளின் மோதல்களையெல்லாம் தாங்கி ஆழ்கடலுக்குச் சென்று அரும்பாடு படும் கடின உழைப்பாளிகள். அவர்கள் கள் குடித்துக் களித்து மயங்கிப் புரண்டு உறங்கி எழுந்தபின் தான் பூரிப்புடன் காணப்படுவர். எனவே அவர்களுக்குப் பேரின்பமும், புத்துணர்ச்சியும் கள்ளில்தான் இருப்பதாகக் கருதுவர். இக்கள்ளருந்தும் பழக்கம் மிகவும் பழையானது. பனமரத்தோப்புகளின் சூழலே அவர்களது குடியிருப்பு. அவர்கள் அப்பனை மரங்களிலிருந்து கள்ளிறக்கிப் பழகி மகிழ்வர்.

பரதவரின் கடல் வாணிகம்

வாணிகத் தொழில் புரிபவர் வணிகர் எனப்பட்டனர். பரதவர்கள் மீன், உப்பு, சங்கு, முத்து

ISBN Number: 978-81-977288-6-0

இவற்றைக் கொண்டு வாணிகம் செய்வதால் அவர்களும் வாணிகர்களே. வாணிகர்களுக்குப் பொதுவாகச் ‘செட்டி’ என்ற பட்டம் உண்டு. அவர்கள் பெயருக்கு இறுதியில் இச்செட்டி என்ற பட்டப் பெயரையும் சேர்த்தே வழங்குவர். அங்ஙனமே பரதவர்களில் ஒரு பகுதியினரான பட்டினவர் என்பார். இன்றும் ‘செட்டி’ என்ற பட்டத்தையே தம் பெயருக்கு பின் சேர்த்து வழங்குகின்றர். பூணூல் அணியும் வழக்கமும் சிலர் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் நாட்டு பரதவர்கள் உலகின் ஒப்புயர்வற்ற தலைசிறந்த கடலோடிகள். ஓங்கியெழுந்து மலையெனப் பெருகிப் பயங்கரப் பேரொலியோடு எதிர்த்து வரும் அலைகடலைக் கண்டு அணு அளவும் அஞ்சாதவர்கள். சுற்றியடித்துச் சுழற்றி மயங்கிக் கரைகாண விடத்தே விடுத்துக் கதிகலங்கச் செய்யும் கருங்காற்றினுக்கும் கவலைப் படாதவர்கள். காற்றின் துணைக்கொண்டு பாய்விரித்துக் கலம் செலுத்திக் காதம் பல கடந்து கரை சேர்வதை முதன் முதலில் கண்டறிந்து உலகிற்குணர்த்தியவர்கள் தமிழ் நாட்டுப் பரதவர்களே, உலகத்தின் மேலை நாடுகளோடும் கீழை நாடுகளோடும் முதன் முதலில் வாணிகத் தொடர்பு கொண்டது இந்தியா-தமிழகமே என்ற உண்மை குறிப்பித்தக்கதாகும்.

 ISBN Number: 978-81-977288-6-0

பரதவர்கள் பிற நாடுகளுடன் வாணிபம் செய்தனர் என்ற செய்தியை உணர்த்தும் சான்று,

> **சேரர்க்கரிய சுற்றி அம் பேரியாது நுரை கலங்குமாறு யவனர்தம் கலங்கள், பொன் கொண்டு வந்து பண்டமாற்றாகக் கொடுத்து மிளகு பெற்றுச் செல்லும் வளமல்கி பட்டினமாய் இருந்தது முசிறி (அகம்., 149:7-11)**

அகநானூற்றில் விழாக்கள்

இன்பமும் துன்பமும் நிறைந்த இந்த வாழ்வில் மனிதன் தன்னைத்தான் மகிழ்ச்சிப்படுத்திக் கொள்வதற்கென பல வழிமுறைகளை வகுத்துக் கொண்டான். வேட்டையாடுதல், விளையாடுதல், பாடுதல், ஆடுதல், விருந்துண்ணல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் வாயிலாக அவனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். தனிமனித மகிழ்ச்சி மட்டுமல்லாது குழுவாக இணைந்தும் தங்களது மகிழ்வினை வெளிப்படுத்தும் விதமாகவும் தங்களது நம்பிக்கைகளின் வெளிப்பாடாகவும் விழாக்களைக் கொண்டாடினர்.

விழாக்கள் என்பது சிறியவர் முதல் பெரியவர் வரை செல்வந்தன் முதல் பொருளற்றவன் வரை அனைவரையும் புன்னகைக்க வைக்கும் மந்திரமாக செயல்பட்டு வருகின்றது. அவரவர் நாடு, மொழி, இனம், பண்பாடு ஆகியவற்றிற்கு ஏற்ப வெவ்வேறு விதமான

 ISBN Number: 978-81-977288-6-0

விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. விழாக்கள் நடைபெறும் விதம் வேறானதாக இருந்தாலும் விழாக்கள் என்றால் மனிதனின் மனம் அடையும் மகிழ்ச்சி ஒன்றாகத்தான் உள்ளது. விழாக்கள் மனிதனின் வாழ்வில் மிக இன்றியமையாத ஓர் இடத்தினைப் பெறுகின்றன. அக்காலத்தில் தமிழர்கள் கொண்டாடிய பலவிதமான விழாக்கள் குறித்த செய்திகள் அகநானூற்றில் இடம்பெற்றுள்ளன. இன்றும் தமிழர்களாகிய நாம்இ நாள் நட்சத்திரத்திற்கு ஏற்ப பல விழாக்களைக் கொண்டாடி வருகிறோம்.

திருப்பரங்குன்றத்தில் முருகனுக்கு விழா

திருப்பரங்குன்றம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்று என்பதுதான். 1. திருப்பரங்குன்றம் 2. திருச்செந்தூர் 3. திருஆவினன்குடி என்கிற பழனி 4. திருவேரகம் என்கிற சுவாமிமலை 5. திருத்தணி 6. பழமுதிர்சோலை ஆகிய தலங்கள் முருகனுக்கு உரிய அறுபடை வீடுகள் என்று அழைக்கப்படுகிறது. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலில், முருகனுக்கு முப்பத்தொரு பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முழுக்க முழுக்க முருகனின் அருட்சிறப்பு குறித்துப் பேசக்கூடிய நூலாக உள்ளது. பன்னிருதிருமுறைகளுள்

 ISBN Number: 978-81-977288-6-0

பன்னிரண்டாவது திருமுறையில் திருமுருகாற்றுப்படை இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சிநிலக் கடவுளான முருகன் குறித்த ஏராளமான செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. அகநானூற்றில் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடிய பாடலில் திருப்பரங்குன்றத்தில் முருகனுக்கு இடையறாது விழாக்கள் நடைபெறும் செய்தியானது இடம்பெற்றுள்ளது. திருப்பரங்குன்றத்தில் முருகன் திருமணக்கோலத்தில் காட்சியளிப்பது மற்றுமொரு சிறப்பாகும்.

கொடிநுடங்கு மறுகில் கூடல் குடாஅது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய
ஒடியா விழவின் நெடியோன் குன்றத்து
வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்து
எதிர்மலர்ப் பிணையல் அன்ன இவள்
அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவே

(அகம்., 149)

தலைவியின் கண்களுக்கு திருப்பரங்குன்றத்தில் உள்ள சுனையில் பூத்த நீலப்பூக்களை உவமையாக்கிக் காட்டுவார் ஆசிரியர். அவ்வாறு உரைத்திடும் போது இடையறாத விழாக்களை உடையது முருகன் வீற்றிருக்கும் திருப்பரங்குன்றம் என்று சிறப்பிக்கிறார் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

ISBN Number: 978-81-977288-6-0

பங்குனி உத்திரத் திருவிழா

இருபத்து ஏழு நட்சத்திரங்களில் பன்னிரண்டாவது நட்சத்திரமாக விளங்கக் கூடியது உத்திரம் நட்சத்திரம். பங்குனி மாத்த்தில் வரக்கூடிய உத்திரநட்சத்திரத்தில் முருகனுக்கு சிறப்பாக விழா எடுக்கக் கூடிய வழக்கத்தினை சங்க இலக்கியங்கள் முதலாகக் காணலாம். அகநானூற்றில்இ உறையூர் முதுகூத்தனார் தனது பாடலில் பங்குனி உத்திர விழா குறித்து பாடியுள்ளார்.

பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்
தீயில் அடுப்பின் அரங்கம் போல (அகம்., 137)

என்ற பாடலில் தலைவியின் பொலிவற்ற நெற்றியினை உவமிக்க இந்த வரிகள் இடம்பெற்றுள்ளன. பங்குனி விழா கழிந்த அடுத்த நாளில் பூக்களும் இலைகளும் நிறைந்த காட்டில் தீயற்ற வெற்றடுப்புகளைப் போல நினது நெற்றி பொலிவற்று உள்ளது என தோழி தலைவியிடம் கூறுமிடத்துக் கூறுவாள். இதன்வாயிலாக பங்குனி உத்திரவிழா சிறப்பாக்க் கொண்டாடப்பட்டதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

கார்த்திகைத் திருவிளக்குத் திருவிழா

பஞ்சபூதங்களையும் இறைவனின் அம்சமாக வழிபடக்கூடிய நம்பிக்கை நம் மக்களிடையே வேரூன்றி

 ISBN Number: 978-81-977288-6-0

உள்ளது. ஆகையால் தான் ஒவ்வொன்றுக்கும் ஒரு திருத்தலம் அமைத்து வழிபாடு நிகழ்ந்து கொண்டு வருகின்றது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தீயினை வழிபடும் வழக்கம் நம்மிடையே காணப்படுகின்றது. இறைவன் சோதி வடிவானவன் என்பது ஞானிகளின் கருத்தாகும். பெரும்பாலான சமங்களில் சோதியினை வழிபடும் நம்பிக்கை காணப்படுகின்றது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் கார்த்திகை திங்கள் அன்று திருவிளக்கு ஏற்றி வழிபடும் விழாவானது தமிழகத்தில் மிக முக்கியமான விழாவாக்க் கொண்டாடப்படுகின்றது.

…மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம (அகம்., 141)

என்ற அகநானூற்றுப் பாடலில் நக்கீர்ர் கார்த்திகைத் திருவிளக்குத் திருவிழா குறித்துப் பாடியுள்ளார். கார்த்திகை மாத்த்தில் தெருக்களில் விளக்குகளை நிரல்பட ஏற்றி மாலைகளைக் கொண்டு அலங்கரித்து விழா கொண்டாடிய செய்தியினை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

உள்ளி விழா

தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஒவ்வொரு இன மக்கள் மட்டுமே கொண்டாடப்படுகின்ற விழாக்களும்

ISBN Number: 978-81-977288-6-0

உண்டு. அவ்வாறு காண்கையில்இ கொங்கு நாட்டினர் உள்ளி விழா எனப்படும் ஒரு வகையான விழாவினைக் கொண்டாடி உள்ளனர் என்ற செய்தியை அகநானூற்றுப் பாடலில் காணமுடிகிறது.

வண்டுபடு கண்ணியர் மகிழும் சீறூர்
எவன்கொல் வாழி தோழி கொங்கர்
மணியரை யாத்து மறுகின் ஆடும்.
உள்ளி விழவின் அன்ன
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே (அகம்., 368)

இப்பாடல் வாயிலாக மதுரை மருதனிளநாகனார் உள்ளிவிழா பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கொங்கு நாட்டினர் மணியினை இடையில் கட்டிக்கொடிண்டுடி தெருவில் ஆடும் ஒருவகை ஆட்டம். இதனை உள்ளிவிழா என்பர். தலைவனும் தலைவியும் சந்திக்கும் நிகழ்வினால் எழுந்த அலரானது கொங்கர் எடுத்த உள்ளிவிழாவின் ஆரவாரம் போன்று உள்ளது என்று ஆசிரியர் கூறுகின்றார்.

பூந்தொடை விழா

கற்றுத்தேர்ந்த புலவர்கள் தாங்கள் படைத்த நூலினை அரசர்கள் புலவர்கள் வீற்றிருக்க்கூடிய அவைக்களத்தில் பல்லோர் முன்னிலையில் அரங்கேற்றம் செய்வர். அவ்வாறு அரங்கேற்றம் செய்யும் போது அரங்கில் உள்ளோர் நூலின் நிறை குறைகளை

 ISBN Number: 978-81-977288-6-0

எடுத்துரைத்துப் பின்னர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளபட்டால் அந்நூல் மக்கள் கற்பதற்காக வெளியாகும். இத்தகைய நூல் அரங்கேற்ற நிகழ்ச்சி முற்காலத்தில் நடைமுறையில் இருந்துள்ளது. அதே போல படைக்கலப் பயிற்சி பெற்றவர்களுக்கும் அரங்கேற்றம் நடந்துள்ளதை அகநானூற்றின் வாயிலாக அறியலாம்.

படைக்கலப் பயிற்சி பெற்ற இளம் வீரர்களை அரங்கேற்றுவிக்கும் விழாவினைப் பூந்தொடை விழா என்று அழைத்துள்ளனர். இச்செய்தியினை

தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம் (அகம்., 187)

என்ற பாடல் வரிகளின் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது. வீரர்கள் கொற்றவன் முன்பாக அரங்கேற்றம் செய்வதே பூந்தொடை விழாவாகும்.

திருமண விழாக்கள்

ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழக்கூடிய உயரிய பண்பாடுதான் மனிதன் மற்றவற்றைக் காட்டிலும் சிறந்தவன் என்று கூறிக்கொள்வதற்கு அடையாளமாகத் திகழ்கிறது என்று கூறலாம். இத்தகைய உறவுக்கு ஓர் அடையாளச் சின்னமாகத் திகழ்வதுதான் திருமணம் என்ற

ISBN Number: 978-81-977288-6-0

நிகழ்வு. என்றைக்கு உலகில் பொய்யும் குற்றமும் தோன்றியதோ அன்றிலிருந்துதான் திருமணம் என்ற பிணைப்பு ஏற்படுத்தப்பட்டது திருமண நிகழ்வு குறித்து அகநானூற்றில் இரண்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. களிற்றுயானை நிரையில் நல்லாவூர் கிழார் பாடிய பாடலில் மருதநிலத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வு குறித்த செய்தி இடம்பெற்றுள்ளது.

திருமணத்தன்று பெரிய பந்தலிட்டு, மணலினைப் பரப்பி, மாலைகளால் தோரணம் கட்டி அழகுபடுத்தியுள்ளனர். திருமணத்திற்காக நல்ல நாள் நட்சத்தித்திரம் பார்த்துள்ளனர். ஆகையால், நல்ல நாள் பார்ப்பதுஇ நட்சத்திரம் பார்ப்பது போன்ற நம்பிக்கைகள் அக்கால மக்களிடையே நிலவி வந்துள்ளதைக் காண முடிகின்றது. திருமணத்தின் போது மணமக்களை மங்கல மகளிர் மற்றும் முதுமகளிர் மலர்களைத் தூவி வாழ்த்திய நிகழ்வினையும் காணமுடிகிறது. அதுமட்டுமின்றி, திருமணத்தின் போது உற்றார் உறவினர்களுக்கு நன்முறையில் விருந்து அளித்த செய்தியினையும் இப்பாடல் வாயிலாகக் காணமுடிகிறது. உழுத்தம் பருப்புடன் கூடிய வெண்பொங்கல் உணவினை விருந்தினர்க்குப் படைத்திட்ட செய்தியினையும் இப்பாடல் வாயிலாக அறியமுடிகிறது. மகவினை ஈன்றெடுத்த மங்கள மகளிர் நால்வர் கூடி நின்று

ISBN Number: 978-81-977288-6-0

மணமகளை கற்பினில் வழாஅமல் நின் கணவனைப் பேணிப் பாதுகாத்தலில் வழுவாமல் வாழ்வாயாக' என்று வாழ்த்திய செய்தியினைக் காணமுடிகிறது. நீரொடு குளிர்ந்த மலர்களையும் நெல்லினையும் கலந்து மணமக்கள் முடியின் மீது தூவி வாழ்த்தியுள்ளனர்.

திருமணவிழாவினைத் தொடர்ந்து மணமக்கள் தனித்திருக்கும் முதல் நாள் இரவில் தலைவன் தலைவியிடம் தனித்துப் பேசுகிறான். தலைவியானவள் நாணம் கொண்டு தன் புடவையைக் கொண்டு தன் முகத்தினை மறைத்துக் கொள்ள, தலைவன் அவளைத் தழுவிக் கொள்கிறான். அவள் நாணத்துடன் தன் முகத்தைக் கைகளில் புதைத்துக் கொள்ள, தலைவன் அவளது கையினை மெல்ல விலக்கி, “உன் மனதில் உள்ளதைக் கூறுவாயாக” என்று வினவுகிறான். அவள் தலைவனின் பிடியிலிருந்து விலகி தலைகவிழ்ந்து நிற்கிறாள். இச்செய்தியினைத் தலைவன் கூற்றாகப் பாடியுள்ளார் நல்லாவூர்க்கிழார்.

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோறு அமலை நிற்ப நிரைகால்…
…மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்குஈர் ஓதி மாஅ யோளே (அகம்., 86: 1-31)

மேற்கண்ட பாடலில் மருதத்திணை மக்களின் திருமணநிகழ்வு மிக விரிவாக எடுத்தாளப்பட்டுதைக்

 ISBN Number: 978-81-977288-6-0

காணலாம். இதேபோலஇ அகநானூற்றில் விற்றூற்று மூதெயினனார் என்ற புலவரும் மருதநிலத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வு குறித்துப் பாடியுள்ளார். நல்லாவூர்கிழார் பாடலில் நடைபெற்ற திருமணத்தில் சைவ விருந்து அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் விற்றூற்று மூதெயின்னார் பாடியுள்ள பாடலில் திருமண விழாவில் இறைச்சி கலந்த சோறு (பிரியாணி) அளிக்கப் பட்டுள்ளதைக் காண முடிகின்றது. இப்பாடலிலும் திருமணத்தின் போதுஇ நல்ல நாள் நட்சத்திரம் பார்க்கும் வழக்கம் இருந்ததைக் காணமுடிகிறது.

மக்கள் திருமணம் நடைபெறும் இல்லத்தினை அலங்கரித்தனர்; கடவுளை வணங்கித் தொழுது மணமுழவும் முரசும் ஒலிக்கத் தலைவியை மங்கல நீராட்டினர். மணமகளுக்குத் தூய்மையான புத்தாடையை அணிவித்தனர். பாவைக்கிழங்கின் வெள்ளிய நூலினைச் சூட்டியுள்ளனர். இத்தகைய சடங்குகளுடன் திருமண் நடந்தேறியுள்ளது. திருமணத்திற்குப் பின்பு தலைவனும் தலைவியும் தனித்திருக்கும் நிலையும் தலைவன் தலைவியிடம் உரையாடியதும் தலைவிய நாணம் கொண்ட நிலையும் மிக உணர்வுப்பூர்வமாகப் பாடப்பட்டுள்ளது இப்பாடலில்.

மைப்புஅறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்...

 ISBN Number: 978-81-977288-6-0

…சுரும்பிமிர் ஆய்மலர் வேய்ந்த

இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே

(அகம்., 136: 1-29)

மேற்கண்ட இரண்டு பாடல்களிலும் முழுக்க முழுக்க திருமண விழா குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். இப்பாடல்களைப் படிக்கும் போது நாமும் அந்த சங்க்கால திருமண நிகழ்விற்கு நேரில் சென்றதைப் போன்ற ஓர் உணர்வு ஏற்படுவதை உணரலாம்.

முடிவுரை

வேட்டையாடுதல், விளையாடுதல், பாடுதல், ஆடுதல், விருந்துண்ணல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் வாயிலாக அவனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். தனிமனித மகிழ்ச்சி மட்டுமல்லாது குழுவாக இணைந்தும் தங்களது மகிழ்வினை வெளிப்படுத்தும் விதமாகவும் தங்களது நம்பிக்கைகளின் வெளிப்பாடாகவும் விழாக்களைக் கொண்டாடினர். ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழக்கூடிய உயரிய பண்பாடுதான் மனிதன் மற்றவற்றைக் காட்டிலும் சிறந்தவன் என்று கூறிக்கொள்வதற்கு அடையாளமாகத் திகழ்கிறது. வழிபாடுகள் நம்மை ஒருவிதமான நம்பிக்கையுடன் வாழச்செய்கின்ற கருவிகள் என்றும் கூறலாம். மனிதன் தன்னைத்தான் மகிழ்ச்சிப்படுத்திக் கொள்வதற்கென பல வழிமுறைகளை வகுத்துக்

ISBN Number: 978-81-977288-6-0

கொண்டான். மேலுகம் காலங்கள் எவ்வளவுதான் மாறினாலும் நாட்டுக்காகப் போர் புரிந்து உயிர்நீத்த வீரர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் மரியாதையும் அவர்களின் தியாக உணர்வும் என்றென்றும் மாறாமல் வரலாற்றில் நிலைத்து நிற்கக் கூடிய அழியாச்சின்னங்கள்தான் நடுகற்கள் என்பதையும் இக்கட்டுரை வாயிலாக நன்கு அறிந்து கொள்ளமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

[1] பொ.வே.சோமசுந்தரனார் உரை. *அகநானூறு*. கழக வெளியீடு, பதிப்பு-1970.

[2] அ.தட்சிணாமூர்த்தி. *சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள்*. மங்கயர்கரசி பதிப்பகம், பதிப்பு-2001.

[3] முனைவர் ப.கோமதி முதலானோர். *சங்க இலக்கியங்களில் மானுட விழுமியங்கள்*. அ. இ. பதிப்பகம், பதிப்பு-2011.

[4] முனைவர் சோ. ந.கந்தசாமி. *இலக்கயைச் சோலையிலே*. வீரசோழன் பதிப்பகம், தஞ்சாவூர்.

[5] முனைவர் கு. வெ.பாலசுப்பிரமணியன். *சங்க இலக்கியத்தில் புறப்பொருள்*. மீரா பதிப்பகம் புதுக்கோட்டை.

 ISBN Number: 978-81-977288-6-0

[6] வித்துவான், எஸ். ஆறுமுகமுதலியார். *இகநானூற்றுச் சொற்பொழிவுகள்.* (முல்லைத்திணை) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

[7] முனைவர் ச. அனிதா சோபியா மார்கிரேட். *அகநானூற்றில் முல்லைத்திணை.* இளந்தமிழ் பதிப்பகம், கோயம்புத்தூர்.

[8] முனைவர் அ. இராஜலட்சுமி. சங்க இலக்கிய ஆய்வுகள். நூலேணி பதிப்பகம், சென்னை.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-81-977288-6-0